# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

செப்டம்பர் 2007 ஜீவியம் 13 மலர் 5

*இம்மாத மலரில். . . .*

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| மழை | 2 |
| இம்மாதச் செய்தி | 10 |
| லைப் டிவைன் | 11 |
| சாவித்ரி | 34 |
| செல்வ வளத்தின் சின்னங்கள் | 36 |
| அன்பர் கடிதம் | 39 |
| ஆன்மீகம் மற்றும் மனோதத்துவ உண்மைகள் | 41 |
| மலரும் மணமும் | 45 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 51 |
| அஜெண்டா | 55 |
| யோக சக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள் | 57 |

❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.
வருடச் சந்தா ரூ.60/-

## ஜீவியத்தின் ஓசை

✡ **ஒருவர் அன்னையை அழைக்கும்முன் அவர் சக்தி செயல்பட ஆரம்பித்துவிடும்.**

✡ **இனிமேல் எதையேனும் சாதிக்கவேண்டுமென்றால் அதை மௌனத்தால் அமைதியாகச் சாதிக்க வேண்டும். மௌனம் எவ்வளவு ஆழ்ந்துள்ளதோ அவ்வளவிற்குச் சாதனை அதிகரிக்கும்.**

# மழை

N. அசோகன்

கடந்த சில வருடங்களாகப் போதுமான மழை இல்லாமல் தமிழகம் தண்ணீர் பற்றாக்குறையால் அவதிப்படுவதை நாமறிவோம். அதுவும் குறிப்பாகச் சென்னை மாநகரம் தொடர்ந்து பல வருடங்களாக இந்த தண்ணீர்ப் பற்றாக்குறைஎன்ற பிரச்சினையைச் சந்தித்து வருகிறது என்பதையும் நாமறிவோம். மேலும் அடுத்த ஆண்டு கோடையில் வரவேண்டிய பற்றாக்குறை இப்பொழுதே சென்னையில் வந்துவிட்டதாக நாளேடுகள் அறிவிக்கின்றன.

இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் அன்னை அன்பர்களாகிய நாம் மழைக்காகச் செய்யக்கூடியதென்னஎன்று தெரிந்துகொள்வது நல்லது. மழையில்லாமல் பூமியில் உயிரினங்களோ, வாழ்க்கையோ இருக்க முடியாது என்பது நாமெல்லோரும் அறிந்த விஷயம். ‘‘நீரின்றி அமையாது இவ்வியனுலகு” என்று பழங்காலத்திலேயே இவ்வுண்மையை பழமொழியாக எடுத்து சொல்லியிருக்கிறார்கள் சான்றோர்கள். மாதம் மும்மாரி பெய்த-தாகக்கூட வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

அப்படி மாதம் மும்மாரி பெய்த நிலைமை மாறி வழக்கமாகப் பெய்கின்ற மழைகூடப் பெய்யாமல் போகின்ற நிலைமை எப்படி வந்துள்ளதென்பதை நாம் கண்டறியவேண்டும்.

மழைஎன்பது இயற்கை நமக்கு வருடந்தோறும் அளிக்கும் கொடை என்றொரு கருத்து பரவலாக மக்களிடையே நிலவி வருகிறது. இயற்கையின் கொடைஎன்ற நிலையையும் தாண்டி மழைஎன்பது இறைவனின் அருளின் வெளிப்பாடு என்றொரு கருத்தை அன்னை வெளியிட்டுள்ளார். மழை அருளின் வெளிப்பாடுஎன்றால் அதை நாம் வரவேற்கக் கடமைபட்டவராகிறோம். மழை பெய்யும்பொழுது நம்மால் வெளியில் போகமுடிவதில்லை என்னும்பொழுது, மழையை நாம் ஒரு தொந்தரவாக நினைப்பதுண்டு. அப்படித் தொந்தரவாக நினைப்பது தவறு



என்று இப்பொழுது புரிகிறது. மழைநீர் நம்மேல் பட்டால் சளி பிடிக்குமென்று நாம் குடை பிடித்துக்கொண்டு போகிறோம். அப்படிக் குடை பிடிப்பதுகூட தவறாக இருக்கலாம். கேரளாவில் மக்கள் மழையில் நனைந்துகொண்டே வேலைக்கு சந்தோஷமாகச் செல்வார்கள் என்று ஓர் அன்பர் கருத்து தெரிவித்தார். அங்குப் பெய்கின்ற ஏராளமான மழைக்கு ஏற்றாற்போன்ற மனோபாவத்தை அம்மாநில மக்கள் வெளிப்படுத்துவதை நாமிதிலிருந்து பார்க்கிறோம்.

தண்ணீர்என்பது ஆன்மீகத்தில் உணர்ச்சிகளின் சின்னமாக விளங்குகிறது. Water stands for emotions. ஒரு நாட்டில் நீர்வளம் அபரிமிதமாக இருக்கிறதென்றால் அந்நாட்டு மக்களும் மனவளம் மிகுந்தவர்களாக இருப்பார்கள் என்றாகிறது. மனவளம்என்பது இங்கு அன்பு, கருணை, பக்தி, நல்லெண்ணம், இரக்கம் போன்ற உணர்வுகளைக் குறிக்கிறது. நீர்வளம் மிகுந்த இடங்களில் பயிர் விளைச்சல் அபரிமிதமாக இருக்கும். நன்றாகப் பயிர் விளைகின்ற இடங்களில் மக்களுக்கு நல்ல சாப்பாடு கிடைக்கும். பசி, பட்டினி இல்லாதபொழுது மக்கள் மனநிலை சந்தோஷமாக இருக்கும். அந்த சந்தோஷத்தின் விளைவாக அவர்களுடைய மனவளமும் சிறந்து மேற்கண்ட மாதிரி அன்பு, இரக்கம், நல்லெண்ணம், பக்தி ஆகியவை மேலோங்கி இருக்கும்என்ற கண்ணோட்டத்திலும் நாம் இதைப் பார்க்கலாம்.

நீர்வளம் குறைந்த இடங்களில் பயிர்வளம் குறைந்து, அதன் விளைவாக பசி, பட்டினி போன்றவை அதிகரிப்பதால், மக்களுடைய சந்தோஷம் கெட்டு, சுயநலம் மிகுந்தவர்களாக இருப்பதையும் பார்க்கிறோம். சுயநலம் மிகுந்துள்ளபட்சத்தில் பிறரிடம் காட்டக்கூடிய அன்பு, இரக்கம், நல்லெண்ணம் ஆகியவை குறைந்துபோவதிலும் ஆச்சர்யமில்லை.

வயிறு நிறைந்து, வசதியான வாழ்க்கை வாழும்பொழுதுதான் நாம் கடவுளிடம் வெளிப்படுத்தும் பக்தி உண்மையிலேயே இறையார்வம் நிறைந்ததாக இருக்கும். பொருளாதாரப் பற்றாக்குறையால் வாடுகின்ற மக்கள் கடவுள் வழிபாடு செய்தாலும், அவ்வழிபாடெல்லாம் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக தெய்வத்திடம் பிரார்த்தனை செய்வதாகத்தான் இருக்கும். வழிபாட்டில் இறையார்வம் வெளிப்படுவதும், பிரார்த்தனையில் இறைவனின் அருளை வேண்டும் யாசக மனப்பான்மை

வெளிப்படுத்துவதும், இரண்டும் சமம் என்று சொல்லமுடியாது. முன்னது உண்மையான பக்தியை வெளிப்படுத்துகிறது. இரண்டாவது தேவையை ஒட்டிய கெஞ்சுகின்ற மனோபாவத்தை வெளிப்படுத்துகின்றது. ஆகவே முதலாவது மனநிலைதான் மனவளத்தை குறிப்பதாகும். இரண்டாம் மனநிலை பொருள்வளம் கெட்டிருப்பதால் மனவளமும் கெட்டிருப்பதைக் காட்டுவதாகக் கொள்ளலாம்.

ஆகவே நீர்வளம், மனம் என்ற இரண்டையும் எடுத்துக்கொண்டால், இரண்டும் ஒன்றையொன்று பாதிக்கின்றனஎன்பது தெரிகிறது. Life responseபடி பார்க்கும்பொழுது மனவளம் மிகுந்திருந்தால் அதன் எதிரொலியாக நீர்வளம் மிகுந்து காணப்படுகிறதென்றாகிறது. சாதாரண-மாகப் பார்க்கும்பொழுது நீர்வளம் மிகுந்திருந்தால்தான் மனவளமும் மிகுந்திருக்கும் என்றாகிறது.

தற்பொழுதுள்ள வறட்சியை life response கண்ணோட்டத்தில் பார்ப்போம். நீர்வறட்சி அதிகமாகியிருக்கிறதென்றால் அதற்கீடாக மனவறட்சி அதிகமாகிவுள்ளதென்றாகிறது. இப்பொழுது எவ்விதத்தில் மனவறட்சி அதிகமாகிவுள்ளதென்பதை பார்ப்போம். அவரவருடைய குடும்பத்தாரிடம் காட்டும் அன்பு, பரிவு, நல்லெண்ணம் போன்றவை பெருமளவில் குறைந்து உள்ளதாகத் தெரியவில்லை. கணவன்-மனைவிஎன்று தம்பதியரிடையே வெளிப்படுகின்ற பரஸ்பர அன்பு மற்றும் பெற்றோர்-பிள்ளைகளிடையேவுள்ள அன்பு ஆகியவை என்றும்போல சகஜமாகவே உள்ளதாகத் தெரிகிறது. பெற்றோர் தம் சிறுபிள்ளைகள்மேல் காட்டுமன்பு குறையவில்லை என்றாலும், வளர்ந்த பிள்ளைகள் வயதான பெற்றோர்மீது காட்டும் அன்பு, அக்கறை ஆகியவை நன்றாகவே குறைந்துபோய்தானுள்ளன.

முதியோர் இல்லங்கள் நாட்டில் பெருகிவருவதே இதற்கு போதுமான சாட்சி. சென்னை மாநகரைப்பொருத்தவரை பக்தி வழிபாடு பெருகி வருவதாகத்தான் தெரிகிறது. சென்னையில் நூற்றுக்கு மேற்பட்ட கோவில்களுள்ளன. இங்கு தெய்வ வழிபாட்டிற்காக வருகின்ற மக்கள் கூட்டம் பெருகிவருவதைத்தான் நாம் பார்க்கிறோம். கூட்டம் அதிகரித்து இருப்பதால் பக்தி ஆழ்நிலையில் பெருகிவுள்ளதென்று நாம் வைத்துக் கொள்ள முடியாது. தெய்வத்திற்குச் செய்யும் அர்ச்சனையை மெக்கானிக்கலாக, ஜீவனில்லாமல் செய்பவர்கள் நிறைய பேர் உள்ளார்கள்.



அர்ச்சனை செய்யும்பொழுது நமக்கு நினைவெல்லாம் தெய்வத்தின் மேல்தானிருக்கவேண்டும். ஆனால் அப்படியில்லாமல் தெரிந்தவர்கள் யார், யார் வந்துள்ளார்கள், புதிதாக என்ன புடவை உடுத்தியுள்ளார்கள், என்ன நகை போட்டுள்ளார்கள் என்று கவனிக்கும் பக்தி உள்ளவர்கள் நிறையவுள்ளார்கள். கோயில் பிரகாரத்தைச் சுற்றி வலம்வரும்பொழுது தெரிந்தவர்களைச் சந்தித்து வீட்டு விஷயங்களைப் பேசுபவர்களும் உண்டு. கார், வேன் என்று எடுத்துக்கொண்டு குடும்பமாக, திருப்பதி சென்று, வசதியான கெஸ்ட் ஹவுசில் நாலைந்து நாட்கள் தங்கியிருந்து, பல ஆயிரங்களை செலவழித்துவிட்டு வருவதைப்பற்றிப் பெருமையாகப் பேசிக் கொள்ளும் பெருமாள் பக்தர்களுண்டு. இப்படி இறைவழிபாட்டில் ஆடம்பரமும் மற்றும் பெருமையுணர்வுகளும், போட்டி மனப்பான்மையும் வந்து கலந்து கொள்வதால் வழிபாட்டிலுள்ள பக்தி மற்றும் புனிதமிரண்டும் பின்னுக்குப் போய் விடுகின்றன.

புராணங்களில் ரிஷியசிருங்கர் என்றொரு இளம் ரிஷிக்குமாரரைப் பற்றித் தகவல்கள் இருக்கின்றன. பெண்கள் சகவாசமே இல்லாமல் வளர்க்கப்பட்டவராமவர். அங்க தேசத்தில் மழை இல்லாமல் வறட்சி நிலவியபோது மழையைக் கொண்டுவருவதற்காக அரசன் செய்த யாகங்கள் எதுவுமே பலிக்காமல்போக, கடைசியாக ரிஷியசிருங்கர் வந்து யாகம் செய்தால்தான் மழை வரும்என்று அந்தணர்கள் சொன்னதன்பேரில் அரசன் அவரை வரவழைத்து யாகம் நடத்தியபின்னர்தான் மழையே பெய்ததாம். அதாவது காமவுணர்வுகளே இல்லாத அளவிற்கு பவித்திரமான ஒருவருக்கு மழை கட்டுப்படும் என்றகருத்து இக்கதைமூலம் வெளியாகிறது.

ராபர்ட் என்றவொரு அமெரிக்க சாதகருக்கு இத்தகைய மழையைக் கொண்டுவரும் ஆற்றலிருப்பதாக கர்மயோகி அவர்கள் தம்முடைய கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளார். அவருடைய ஆன்மா மிகவும் பரிசுத்த-மானது என்பதால் அவருக்கு இப்படியொரு சக்தியிருப்பதாக விளக்கமும் அளித்துள்ளார்.

புராணங்களில் வருணபகவானை மழைக்கு அதிபதியாக வர்ணித்து உள்ளார்கள். அன்னை மழை “Overmental gods” என்ற பெருந் தெய்வங்-களின் கட்டுப்பாட்டில் உள்ளதாகச் சொல்கிறார். அன்னை இவர்களைத் தாண்டி சத்தியஜீவிய நிலையில் இருப்பவர். அன்பர்கள் மழை வேண்டி

அன்னையிடம் பிரார்த்தனை செய்யும்பொழுது அன்னை அப்பிரார்த்த-னையை நிறைவேற்றும்பொருட்டு மழையை நிர்வகிக்கும் பெருந்தெய்வங்-களுக்குக் கட்டளையிட்டால் அவர்கள் அன்னையின் ஆணைக்குப் பணிந்து மழை பெய்ய வைப்பார்கள்என்று நாம் எதிர்பார்க்கலாம்.

மழைக்காக அன்பர்கள் அன்னையிடம் பிரார்த்தனை செய்யும்பொழுது எல்லாம் மழை தவறாமல் பெய்தால் மேற்சொன்னபடி பெருந்தெய்வங்களுக்கு கட்டளையிட்டு அன்னை நம்மை மகிழ்விக்கின்றார்என்று நாம் யூகிக்கலாம். ஆனால் பிரார்த்தனை சில சமயங்களில்தான் பலிக்கின்றது; பல சமயங்களில் பலிப்பதில்லை என்னும்பொழுது எந்தக் கட்டத்தில் தடை வருகிறதென்பதை நாமாராயவேண்டும்.

பிரச்சினையின் அளவு மற்றும் கடுமைக்கேற்ப பிரார்த்தனையும் தீவிரமாக இருந்தால்தான் விஷயம் நகருமென்றவொரு இடமுள்ளது. தலைவலிஎன்பது சாதாரண சிறிய உடல் உபாதை. அதற்கு 5 நிமிடம் அன்னையிடம் பிரார்த்தனை செய்தால்போதும்; தலைவலி விட்டுவிடும் என்று நம்பலாம். ஆனால் கேன்சர், டி.பி., அல்சர் (வயிற்றுப்புண்) போன்றவை உயிருக்கு ஆபத்தை வரவழைக்கும் வியாதிகள் என்னும் பொழுது அவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் அதற்கீடான தீவிரமாக பிரார்த்தனை செய்தால்தான் குணமடைவார்கள் என்றாகிறது. தலை வலிக்கு லேசாகச் செய்யும் பிரார்த்தனைபோல் கேன்சருக்கும் லேசாக, நாளொன்றிற்கு 5 நிமிடங்கள் மட்டும் பாதிக்கப்பட்ட அன்பர் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தால் அவர் எதிர்பார்க்கும் வேகத்தில் கேன்சரிலிருந்து குணமடைவதுஎன்பது சிரமமாகும். இப்படியொருவர் லேசான பிரார்த்தனை என்ற அணுகுமுறையை மேற்கொண்டுள்ளார்என்றால் அவருக்கு வந்துள்ள கேன்சரை அவரே சீரியஸாக எடுத்துக்கொள்ளவில்லை என்றாகிறது.

அன்பர்கள் கேட்குமளவிற்கு, கேட்கும் வேகத்தில் மழை வருவதில்லை என்றால் அன்பர்களே மழையில்லைஎன்ற பிரச்சினையை அந்த அளவிற்கு சீரியஸாக எடுத்துக்கொள்ளவில்லை என்றுதான் நாம் முடிவு செய்ய வேண்டும். சென்னையில் வசிக்கும் பல அன்னை அன்பர்கள் tanker lorryஇல் வரும் தண்ணீர் சப்ளையை விலை கொடுத்து வாங்கிக் கொள்கிறார்கள். அல்லது அவர்கள் வசிக்கின்ற அப்பார்ட்மெண்ட்ஸ் அசோசியேஷனிடம் water charges என்று தனியாக 500/- ரூபாய் அளவிற்குக் கொடுத்துவிடுகிறார்கள். ஆகவே மேல்மட்டம் மற்றும் இடை மட்டத்தை (upper class & middle class) சேர்ந்த அன்பர்களுக்கு இந்த 500/- ரூபாய் கூடுதல் செலவு பெரிதாகத் தெரிவதில்லை. அவர்களுக்கு தண்ணீர்ப் பற்றாக்குறைஎன்ற பிரச்சினை வாராதபொழுது ஊர்மக்களும், கீழ்மட்டத்தில் இருப்பவர்களும் தண்ணீருக்குப் படும்பாடு இவர்கள் நெஞ்சைத் தொடுவதில்லை என்றாகிறது. தம்மை மனதளவில் பாதிக்காத ஒரு விஷயத்தை பிரச்சினையாக நினைத்து அன்பர்கள் செய்கின்ற பிரார்த்தனையில் தீவிரம் வாராமல் போவதில் ஆச்சர்யமில்லை.

எந்தவொரு பொருளையும் விரயம் செய்தால் அது நம்மை விட்டு விலகிப்போகும்என்பது life response நமக்கு கற்றுக்கொடுத்துள்ள பெரிய உண்மையாகும். பணத்தை விரயம் செய்தால் வருமானம் குறையும், மூலப் பொருளை விரயம் செய்தால் தொழிற்சாலைகளுக்கு வரும் ஆர்டர் குறையும்என்பதை அனுபவத்தில் பலர் பார்த்திருக்கின்றனர். அதே ரீதியில் இன்று தமிழக மக்களுக்குத் தண்ணீர்ப் பற்றாக்குறையாகிவுள்ளது என்றால், தண்ணீர் நிறைய கிடைத்த காலத்தில் அதை நிறைய விரயம் செய்துள்ளார்கள் என்றாகிறது. Overhead tank நிரம்பிய பின்னும் தண்ணீரை வழியவிடுவது, தண்ணீர் கசிகின்ற குழாய்களை ரிப்பேர் பண்ணாமல் தொடர்ந்து தண்ணீரை ஒழுகவிடுவது, முனிசிபல் குழாய்களை மூடாமல் மணிக்கணக்காக தண்ணீர் போகவிடுவது, இலவச மின்சாரம் கிடைப்பதால் பம்ப்செட்டுகளை தேவைக்குமேல் ஓடவிடுவது என்று பலவகைகளில் தமிழக மக்கள் தண்ணீர் அபரிமிதமாகக் கிடைத்த நாட்களில் அதை விரயம் செய்துள்ளார்கள். அந்த கர்மபலனைத்தான் இன்று நாம் வறட்சியாக அனுபவிக்கின்றோம். அண்மையில் தமிழக அரசு விழித்துக்கொண்டு, மழைநீரின் அருமையை உணர்ந்து, மழைநீர் சேகரிப்பு திட்டங்களைத் தமிழகம் முழுவதும் அவசரமாக அமுல்படுத்தியுள்ளது. நாம் ஏற்படுத்திக்கொண்டுள்ள கர்மபலனைக் கரைப்பதற்கு இது உதவியாக இருக்கும்.

அன்னை அன்பர்கள் இவ்விஷயத்தில் மழைக்கு ஒத்துழைக்க விரும்பினால் அவரவர் வீடுகளில் தண்ணீரைப் பயன்படுத்துவதில் விரயத்தைத் தவிர்த்து, சிக்கனத்தைக் கொண்டுவரவேண்டும். குளிப்பதற்கு ஒரு வாளி அல்லது ஒன்றரை வாளி தண்ணீர் போதுமென்றால், அதற்குள்

குளித்து முடிக்கவேண்டும். இம்மாதிரி பாத்திரம் கழுவுவதற்கும், துணி துவைப்பதற்கும், வீட்டில் தரை துடைப்பதற்கும் எவ்வளவு தண்ணீர் தேவை என்பதைக் கணக்கிட்டு, அதற்குள் வேலையை முடித்துக்கொள்ள கற்றுக் கொள்ளவேண்டும். Overhead tankஐ வழியவிடாமல் automatic ஸிஸ்டத்தை பொருத்தவேண்டும். குழாய்களில் தண்ணீர் கசிவது தெரிந்தால் உடனே plumberஐ வரவழைத்து washerஐ மாற்றி, கசிவை நிறுத்தவேண்டும். Sump மற்றும் overhead tank ஆகியவற்றை அடிக்கடி சுத்தம் செய்து, பாசி மற்றும் அழுக்கேறாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

சென்னை நகர மக்கள் கூவமாற்றை ஒரு ஓடும் சாக்கடையாக மாற்றியுள்ளார்கள். ஜீவனுள்ள ஒரு நதியை சாக்கடையாக மாற்றுவது என்பது நீர்வளத்தை நாம் அவமதிப்பதாகும். கூவமாற்றை சுத்தப்படுத்த வேண்டுமென்று சென்னை நகரிலுள்ள Civic Associations மற்றும் Exnora போன்ற சுற்றுப்புறச் சூழ்நிலை பாதுகாப்பை பாராட்டும் அமைப்புகளெல்லாம் ஒன்றுசேர்ந்து குரலெழுப்பி, தமிழக அரசை இதன்பொருட்டு நடவடிக்கைகள் எடுக்கவைத்தால், அதற்கு மழை ஒரு நல்ல ரெஸ்பான்ஸ் கொடுப்பதை பார்க்கலாம்.

பூமாதேவி என்பவள் எல்லையற்ற பொறுமையுடையவள் என்று புராணங்கள் வர்ணிக்கின்றன. “அகழ்வாரை தாங்கும் நிலம் போல தம்மை இகழ்வார் பொறுத்தல் தலை” என்பது வள்ளுவருடைய கூற்று. ஆனால் இப்படிப்பட்ட பூமாதேவியின் பொறுமையையே சோதிக்குமளவிற்கு நம் நாட்டில் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு (environmental pollution) அதிகரித்து உள்ளது. இப்பாதிப்பு air pollution, water pollution மற்றும் land pollution என்று மூன்று வகைகளாகவும் அதிகரித்துள்ளது. பஸ் மற்றும் காரிலிருந்து வெளியேறும் புகை நம்மைச் சுற்றியுள்ள காற்றை எந்த அளவிற்கு மாசுபடுத்தியுள்ளது என்பதை, சொல்லத் தேவையில்லை. தொழிற்சாலை கழிவுகள் மற்றும் வீட்டிலிருந்து வெளியேறும் waste water போன்றவை தண்ணீர் வளத்தை எந்த அளவிற்குக் கெடுத்துள்ளது என்பதையும் நாம் நன்றாக அறிவோம். காடுகளை வெட்டிச் சாய்ப்பது, மற்றும் மலைபோல மாநகரக் குப்பைகளைக் கொட்டிக் குவிப்பது, ஆற்றுப்படுகையில் வரையறை இல்லாமல் ஆற்றுமண்ணை தோண்டி எடுத்துச் செல்வது போன்ற பல வகைகளில் நாம் சுற்றுப்புறச் சூழலைக் கெடுத்துள்ளோம்.

2001 குடியரசு தினத்தன்று குஜராத்தில் வந்த நிலநடுக்கம் காரணமாக



விளைந்த பேரழிவு, பருவமழை தவறுதல் மற்றும் குறைந்துபோதல், காவிரி போன்ற நதிகளில் நீர்வரவு குறைந்துபோதல், கோடைவெப்பம் கடுமையாக அதிகரித்தல் ஆகியவையெல்லாம் பூமாதேவி நமக்கு வழங்கும் எச்சரிக்கைகள் என்று எடுத்துக்கொள்ளலாம். இந்த எச்சரிக்கைகளை புரிந்துகொண்டு, நம் நாட்டு மக்களும் அரசாங்கமும் மனோபாவத்தையும் நடவடிக்கைகளையும் மாற்றிக்கொண்டு, இயற்கைக்கும் பூமாதேவிக்கும் ஒத்துழைக்கும் வகையில் நடந்துகொண்டால், நாமிழந்த மழையெல்லாம் நமக்குத் திரும்பக் கிடைப்பதைக் காணலாம்.

“நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை” என்பது ஔவையாரின் கூற்று. முடியாட்சி நடைபெற்ற காலத்தில், அரசனே நாட்டின் ஜீவனாக விளங்கிய காலத்தில் சொல்லப்பட்ட கருத்து இது. அதாவது அரசன் நல்ல முறையில் ஆட்சி செய்தால் அதற்குப் பரிசாக நாடு முழுவதும் மழை பெய்யும் என்ற பொருள்பட அவர் எழுதியுள்ளார்.

இன்று முடியாட்சி போய் குடியாட்சி வந்துள்ளது. இருந்தாலும் ஔவையாரின் கூற்றிலுள்ள உண்மை மாறவில்லை. பாரதமாதா பாராட்டும் வகையிலும், அவருக்கு மேலிருக்கும் சத்தியஜீவிய அன்னை பாராட்டும் வகையிலும் நம் நாட்டை ஆள்பவர்கள் நடந்துகொண்டார்கள் என்றால், ஔவையாரின் கூற்று இன்றும் பலிப்பதைக் காணலாம்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சிருஷ்டியின் தலைவியான அன்னை, தம்முடன் சேரும் பாக்கியத்தை உரிமையாக நமக்களிக்கிறார்.

அதைச் செய்யாமல் அன்னையிடமிருந்து எப்படிப் பெறுவது?

- ***நம்மிடம் வேலை செய்பவர்களை நம் நிலைக்குயர்த்த நமக்கு மனமிருக்கிறதா?***
- ***தொழிலாளி முதலாளியாக முதலாளி மனம் இசையுமா?***

## இம்மாதச் செய்தி

**பிறர் குறையில்**

**அவர் நிறைவைக்**

**காண்பது ஆத்ம நிறைவு.**





## லைப் டிவைன்

கர்மயோகி

### 15. உயர்ந்த சத்தியஜீவியம்

சச்சிதானந்தத்தை 4 அத்தியாயங்களில் எழுதிய பகவான் அடுத்த அத்தியாயமாக தெய்வீக மாயையை எழுதினார். மாயை பிரம்மத்தின் ஜீவியம்என்பது பகவான் விளக்கம். மாயை உலகை சிருஷ்டித்தது என்கிறார். பிரம்மத்தில் எல்லாம் எல்லாவற்றிலும் உள்ளது (all is in all). இது அசைவற்ற சாரமான சத்தியம். இதை மாற்றுவது சிருஷ்டி. எல்லாம் ஒன்றினுள்ளும், ஒன்று எல்லாவற்றிலுமிருப்பது (all is in each, each is in all) சிருஷ்டி. இப்படி மாற்றியது மாயை. அடுத்த அத்தியாயம் சத்திய ஜீவியம் – சிருஷ்டிக்கர்த்தா. சத்தியஜீவியம் சச்சிதானந்தத்திற்கும், உலகுக்கும் இடைப்பட்டது. அது சிருஷ்டிக்கப் பயன்படுத்தும் கருவி – முழு எண்ணம் (Real-Idea). அது சிருஷ்டிக்கும் லோகம் சத்தியஜீவியம். முழு எண்ணத்தில் அறிவும், உறுதியும் (knowledge and will) இணைந்து இருப்பதால் சிருஷ்டி ஏற்படுகிறது. அதற்கடுத்த அத்தியாயம் இது. இந்த அத்தியாயத்தின் முக்கியக் கருத்துகள்:

1. **சத்தியஜீவியம் பிரம்மத்தின் அகண்ட வெளிப்பாடு.**
2. **இது சத்என்பதை சத், சித், ஆனந்தம்எனப் பிரித்தது.**
3. **சத்தியஜீவியம் சச்சிதானந்தத்தின் சுபாவம்.**
4. **சத்தியஜீவியமே பிரபஞ்சமாயிற்று.**
5. **சத்தியஜீவியம் முழுமையுடையது.**
6. **சத்தியஜீவியம் உலகை சிருஷ்டித்து, தன் இச்சைப்படி அதை நடத்த,**

**தானே தன்னுள் உலகை வைத்துக்கொண்டு, அதன் சக்தியால், அதன் இச்சைப்படி, அதனுள் உலகைச் செயல்படுத்துகிறது.**

7. **இது மனத்திலிருந்து மாறுபட்டது.**
8. **இது காலத்தைக் கடந்தது.**
9. **பிரம்மம் அனைத்துள்ளும் இருக்கிறது; அனைத்தும் பிரம்மத்துள் இருக்கின்றன; அனைத்தும் பிரம்மம்என்பது சத்தியஜீவியச் சூத்திரம்.**
10. **சத்தியஜீவியத்தை இரண்டாகப் பிரித்து - காலத்தைக் கடந்தது, காலத்துள் உள்ளதுஎன இரண்டாகப் பிரித்து - இது மனத்தை அவற்றிடையே உற்பத்தி செய்தது.**
11. **அப்படி உற்பத்தியான மனம், உயிர், உடல் ஆகியவற்றை அறிவது சத்திய ஜீவியத்தை அறிவதைவிட எளிது.**
12. **உலகம்என்ற முழு ஒருமையினின்று மனம் மனிதனைப் பிரித்து விடுவதால் மனிதன் சிறியது (finite) என்ற கண்டமாகிறான். சத்திய ஜீவியம் அப்படிப் பிரிந்த மனிதனை உலகத்துடனும், பிரம்மத்துடனும் இணைக்கிறது.**

இந்த அத்தியாயக் கருத்துகளை எடுக்கும்முன் சத்தியஜீவியம் சச்சிதானந்தத்தின் சுபாவம்என்ற கருத்தையும், ஒன்று பலவாகி உலகம் ஏற்பட்ட இரகஸ்யத்தையும், சத்தியஜீவியம் பெற்ற வரலாற்றையும், காலமும் இடமும் அவசியம்என்பதையும் கருதுவோம்.

1. **சுபாவம்: நமது சுபாவம் வேகம் என்றால் நாம் செய்யும் காரியங்களிலும் வேகம் வெளிப்படும். வெளிப்படுவது சுபாவம். அதையே பகவான் சக்தி power என்கிறார். சில உதாரணங்கள்:**

   ✡ எலக்ட்ரிசிட்டியின் சுபாவம் ஷாக் அடிக்கும், எலக்ட்ரிசிட்டியின் சக்தி ஷாக் அடிக்கும்என நாம் அறியலாம். என்றாலும் power, nature என்பவை சற்று வேறுபட்டவை. பெண்ணின் சுபாவம் மென்மை. பெண்ணின் சக்தி பிள்ளையை சிருஷ்டிப்பது. சத்தியஜீவியத்தை பகவான் சச்சிதானந்தத்தின் சுபாவம் என்கிறார். அறிவின் சுபாவம் ஆராய்வது, புரிந்துகொள்வது, அறிவின் சக்தி (power) ஒழுங்கை ஏற்படுத்துவது (organising). படிப்பின் சுபாவம் தெளிவு தருவது. படிப்பினுடைய சக்தி (power) வேலை பெற்றுத் தருவது. மனம் பிரிக்கும்பொழுது பொருள்களைத் தனித்தனியாக்கிவிடும்; ஒரு கட்டையைத் துண்டாடுவதுபோல். சத்தியஜீவியம் (**differentiates without dividing**) பொருள்களின் அம்சத்தைப் பிரிக்கின்றது. பொருள்களைப் பிரிப்பதில்லை. மனம் பிரிப்பது சொத்து பாகப்பிரிவினை செய்வதுபோல். சத்தியஜீவியம் பிரிப்பது குடும்பம் பிரிவதுபோன்றது.



## Page 132 / Para 1:

சத்தியஜீவியம் அனைத்தையும் தன்னுட் கொண்டது. அனைத்தையும் தன்னில் உற்பத்தி செய்கிறது. அனைத்தையும் தன்னுள் பூர்த்தி செய்கிறது. நாம் சத்தியஜீவியத்தை தெய்வீகப் புருஷனின் சுபாவமாகக் (nature of Sachchidananda) கருதவேண்டும். சச்சிதானந்தத்திற்கு இரு அம்சம் உண்டு. 1) பிரம்மமாக பிரபஞ்ச வாழ்வு, 2) ஈஸ்வரனாக உலகை சிருஷ்டிக்கும் அம்சம். நாம் இரண்டாம் அம்சத்தின் சுபாவமாக சத்திய ஜீவியத்தைக் கருதவேண்டும். நாம் கடவுள்எனக் கூறுவது இதையேயாகும். இது சிறிய, இஷ்டதேவதையில்லை. மேல்நாட்டார் கடவுளை பலம் வாய்ந்த மனிதனாகக் கருதுகிறார்கள். இஷ்டதேவதையென நாம் சத்திய ஜீவியத்தைக் கருதினால் மேல்நாட்டார் செய்யும் தவறு எழும். அது மனித மனத்திற்குரியது. அகந்தைக்கும் சத்தியஜீவியத்திற்கும் உள்ள உறவாக முடியும். தெய்வம் இஷ்டதெய்வமாக இருப்பதை நாம் மறுக்க முடியாது. பொதுவான அம்சம் பிரபஞ்ச வாழ்வின் ஓர் அம்சம்தான். தெய்வம் வாழ்வின் எல்லா அம்சங்களையும் கொண்டது. ஆனால் தெய்வம் ஒரு புருஷன். தெய்வம் தன்னையறிந்த புருஷன். அது புருஷன்என்பதை மறுக்க முடியாது. இங்கு நாம் அந்த அம்சத்தைக் கருதவில்லை. தெய்வீக ஜீவியத்திற்குப் பொதுவாக மனமான சத்தியம் உண்டு. அதையே நாம் இங்குக் கருதுகிறோம். இந்த அம்சத்தை விரிவாகக் கருதி தெளிவாக வரையறுப்பது நம் நோக்கம்.

சமூகம், சர்க்கார் என்பவற்றைக் கருதினால் ஓரளவு சச்சிதானந்தம், சத்தியஜீவியம் புரியும். சர்க்கார் சமூகத்தின் சுபாவம்எனக் கொள்ளலாம். சர்க்காருக்கு அரசியல், நிர்வாகம்என இரு அம்சங்கள் உள்ளன. நிர்வாகம் சக்தி வாய்ந்தது. ஆனால் நாம் கருதுவது சர்க்காரின் அரசியல் அம்சம். அரசியல்என்பது கட்சிகளிடையே குறிப்பாகிறது. கட்சிகளைக் கடந்து சர்க்காரின் அரசியல் அதிகாரத்தை நாம் பிரித்துக் காணலாம். அதையே இங்கு நாம் செய்கிறோம்.

சமூகம் - சச்சிதானந்தம்.

சர்க்கார் - சத்தியஜீவியம்

1) அரசியல், 2) நிர்வாகம்

அரசியலிலும் பொதுவானது, குறிப்பானது என்பவையுண்டு. நாம் பொதுவான அம்சத்தைக் கருதுகிறோம்.

## Page 132 / Para 2:

சத்தியஜீவியம் பிரபஞ்சம் முழுவதும் பரவியுள்ளது. அது ஞானம்; சுயமாகப் பெற்ற ஞானம். அந்த ஞானத்திற்குச் சக்தியுண்டு. பிரபஞ்சத்தை அது ஓர் ஒழுங்குக்குள் கொண்டுவரும் திறமை படைத்தது. ஏகன் (One) என்ற புருஷன் அநேகன் (the Many) என்ற வாய்ப்பைத் தன்னுள் அனந்தமான வித்தாகப் பெற்றுள்ளது. ஒன்று பலவாகும்பொழுது அவற்றிடையே சுமுகமான உறவை - ஒழுங்கை - ஏற்படுத்தும் திறன் சத்தியஜீவியத்துடையது. இந்த ஒழுங்கை நிலைநாட்டும் சக்தி இல்லா-விட்டால், அதுவும் சுயமான ஞானமாக இல்லாவிட்டால் பிரபஞ்சம் குழப்பம் நிறைந்த அலைகள் புரளுமிடமாகும். அதன் வித்தான சக்தி அனந்தம். அதனுடைய லீலை கட்டுக்கடங்காத, கட்டுப்படுத்த முடியாத (Chance) சந்தர்ப்பம் இக்குழப்பத்தை விளைவிக்கும். புதைந்துள்ள சக்தி அனந்தமானால், வழிநடத்தும் சட்டமில்லையெனில், அத்தகைய சத்தியம் இல்லையெனில் குழப்பம் விளையும். நிலையற்ற நிலை, குழப்பத்திற்கு வித்து. உருவம் பெறாத பொங்கிவரும் சக்தி குழப்பத்தில் முடியும். சத்திய ஜீவியத்திற்கு சுயதிருஷ்டியுண்டு; சுமுகம் உண்டு; முன்கூட்டி முடிவு பெறும் எண்ணம் உண்டு. அவை பரிணாமத்திற்குரிய வித்தாக உள்ளே புதைந்து இருப்பதால், குழப்பம் தவிர்க்கப்பட்டு, சுமுகம் எழுகிறது. சிருஷ்டிக்கும் ஞானம் ரூபங்களையும் சக்திகளையும் கட்டவிழ்க்கிறது. அந்த ரூபங்கள் சத்தியஜீவியத்துடையவை. அந்த சக்திகள் சத்தியஜீவியத்துடையவை. அதைத் தவிர வேறில்லை. அவ்விடத்தை ஆட்சி செய்யும் சட்டமும், சத்தியமும் தன் ஜீவனின் திருஷ்டி. அதனுடன் பிறந்தவை பல உண்டு. மற்ற வித்தான சக்திகளைத் தொடர்புகொள்ளும்பொழுது சுமுகத்தை நிலைநாட்டும் திறன் அதற்குண்டு. தன் சுயகருத்தில் சத்தியஜீவியம் மற்றவற்றுடன் தொடர்புகொள்ளும்பொழுது அங்கு ஒரு சுமுகமாக அசைவு வேண்டும் என்பதையறியும். அச்சுமுகத்தை நிலைநிறுத்த தேவைப்பட்ட சத்தியம் ஏற்கனவே அதனுள் உள்ளது. உலகின் சட்டம் எழ, அதை நடைமுறையில் நிலைநிறுத்த சத்தியஜீவியம் உற்பத்தி ஸ்தானம். அது கண்மூடித்தனமான சட்டமன்று. அது சுயசுபாவத்தை வெளிப்படுத்துவது. முழு எண்ணத்தால் அது கட்டாயப்படுத்தப்படுகிறது. பிறப்பில் அவை அமைந்த விதம் முக்கியம்என்பது கொள்கை. எனவே ஆரம்பத்திலிருந்து இவ்முழுவெளிப்பாடும் நிர்ணயிக்கப்பட்டது. அதுவே அதன் சுயஞானம். ஒவ்வொரு நிமிஷமும் அதுவே அது செயல்படும் வகை. அதன் பிறப்பிலுள்ள சத்தியப்படி, ஆதியில் எழுந்த அமைப்பின்படி சத்தியஜீவியம் அப்படி அமைக்கப்பட்டுள்ளது. அடுத்தது என்ன என்பதை நிர்ணயிக்கும்படி அது நகருகிறது. அதுவும் பிறப்பில் அமைந்ததே. முடிவாக அது ஆரம்பத்தில் விதையில் உள்ளபடி மலரும்; வெளிப்படும்.

நாடகத்தில் நடிகன் நடிப்பது, பேசுவது, அவன் போட்டுள்ள உடை, அவனது உணர்ச்சிகள் ஆரம்பத்திலேயே - கதையில் - எப்படியிருக்க வேண்டும்என கதை நிர்ணயித்துள்ளது. அதுபோல் சத்தியஜீவியம் பிரபஞ்ச சிருஷ்டியை நிர்ணயித்துள்ளது.

## Page 133 / Para 3:

உலகம், பிரபஞ்சம் என்பவை ஆதியான பிரம்ம சத்திய வெளிப்பாடா-னவைஎனில், அவை வெளிப்பட காலமும், இடமும் அவசியம். காலமின்றி

சலனமில்லை. காலம் இல்லாவிட்டால், சலனமற்ற சுமுகம் நிலவும். காலத்தின் நிகழ்ச்சிகளைத் தாங்க இடம் தேவை. எனவே காலத்தால் நடப்பவை இடத்தால் தாங்கப்படும்பொழுது, காலமும் இடமும் தொடர்புகொள்கின்றன. இத்தொடர்பை (Causality) காரணத்தால் ஏற்பட்ட காரியம் என்கிறோம். சுருக்கமாக காரண காரியமெனலாம். தத்துவம் பேசுபவர்க்கு காலமும், இடமும் வாதத்திற்குரிய கருத்துகள். உண்மையில் காலம், இடம்என்பவை இல்லைஎன்பது அவர் கொள்கை. நம் கொள்கைப்படி பரம்பொருள் (Conscious Being) உலகமாயிற்று. ரூபம் பரம்பொருள், சக்தியும் பரம்பொருள். எனவே நமக்கு காலமும், இடமும் பரம்பொருளின் திருவுருவம். தத்துவம் நமக்குப் பயனற்றது. பரம்பொருள் தன் அசைவுகளைக் காணுதல் காலம். அவற்றைப் புறத்தில் தாங்கிப் பிடிப்பது இடம்என்பது பகவான் ஸ்ரீ அரவிந்தர் விளக்கம். காலம் பரம்பொருளின் அகநிகழ்ச்சி. இடம் பரம்பொருளின் புறநீட்சி. மனம் காலத்தையும், இடத்தையும் தன் பாகுபடுத்தும் சுபாவப்படி காண்கிறது.

- ✰ **பரம்பொருளான ஆத்மாவின் அகமும், புறமும் பரம்பொருளே.**
- ✰ **அகநிகழ்ச்சி காலம்; புறநீட்சி இடம்எனில், இவையிரண்டும் ஆத்மாவின் – பரம்பொருளின் – அசைவுகள். மனம் காலத்தை இடத்தினின்று பிரித்து வெவ்வேறாகக் காண்கிறது.**

வீட்டில் வருமானம் செலவாகிறது. உள்ளே வருவது வெளியே போகிறது. உள்ளே வருவதும், வெளியே போவதும் ஒன்றே. கணவனுக்கு, தான் சம்பாதிப்பது தெரியும். மனைவிக்கு, தான் செலவு செய்வது தெரியும். பிணக்கு இதனால் ஏற்படுகிறது; பிரித்துப்பார்த்தால் பிணக்கெழும்; சேர்த்துப் பார்த்தால் பிரச்சினை தீரும்.

கடந்தது, நிகழ்வது, வருவதுஎன்ற பிரிவுகளுள்ள அசைவின் தொடர்பு காலம். மனம் குறிப்பிட்ட இடத்தினின்று முன்னும், பின்னும் காலத்தைக் கண்டு அறியும். இடம்என்பது நிலையான வீட்சி. பொருளைப் பிரிப்பதால் ஏற்படுவது இடம். பிரிந்து நிற்கும் பொருளின் பரப்பில் மனம் தன்னை ஓரிடத்தில் நிறுத்தி முன்னும், பின்னும், சுற்றியும் கண்டு இடத்தை அறிகிறது.



கட்டடம் கட்டுகிறோம். கட்டடம் ஆதி, முதல், முழுமையான செயல். இதன் அம்சங்கள் பல. அவற்றுள் பணம் ஒன்று. செங்கல், சிமெண்ட் போன்றவை அடுத்தவை. பணம் அகம்; கல், சிமெண்ட் புறம். எவ்வளவு பணம் செலவாகியுள்ளது, எதற்குச் செலவாகியுள்ளதுஎனக் கணக்குப் பார்த்து எவ்வளவு கட்டடம் முடிந்துள்ளதுஎன அறியலாம். எவ்வளவு கல், சிமெண்ட் செலவாகியுள்ளதுஎன்பதும் அதைக் காட்டும். வாழ்வெனும் கட்டடத்தை காலம், இடத்தால் மனம் அறியும். இடம் இல்லாவிட்டால் கட்டடமில்லை. மனம் திட்டமிடாவிட்டால், காலத்தால் நினைவைச் செப்பனிட்டு திட்டமிடாவிட்டால், கட்டடம் எழுந்திருக்கப்போவதில்லை.

## Page 133 / Para 4:

நல்லது, கெட்டதைக் கடந்து முழு நல்லதுண்டு. ஒளி, இருளைக் கடந்து இருளற்ற ஒளியுண்டு. இதை Self-existent good சுயமான நல்லது என்கிறோம். பிரம்மம்என்பது ஆதி. ஆனாலும் நாம் ஆனந்த பிரம்மம், ஜடப் பிரம்மம்என எல்லா நிலைக்கும் பிரம்மம்என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம். அதேபோல் அனந்தம்என்பது அந்தம் (முடிவு) என்பதற்கு எதிரானது. பிரம்மம் அனந்தமானது. உலகம் அந்தமானது. என்றாலும் உலகத்திற்கும் அனந்தம் உண்டுஎன்பது ஸ்ரீ அரவிந்தம். காலத்தைக் கடந்தது அனந்தமெனில், காலம் முடிவில்லாமல் தொடர்ந்து வருவதால் அதற்கும் அனந்தமுண்டு. எல்லா நிலைகளுக்கும் பிரம்மம் உண்டு என்பதைப்போல், எல்லா நிலைகளுக்கும் அனந்தமுண்டு. இவை ஸ்ரீ அரவிந்தத்திற்கேயுரிய அடிப்படைக் கருத்துகள். பிரம்மமே உலகம் ஆனதால் எல்லா நிலைகளிலும் பிரம்மம் உண்டு. பிரம்மம் அனந்தம் ஆனதால், எல்லா நிலைகட்கும் அனந்தம் உண்டு.

- ❍ **பெரியது, சிறியதனுள் வந்தால் பெரிய அம்சம் தவறாது தன்னை வெளிப்படுத்தும்.**
- ❍ **அழியாத ஆத்மா அழியும் உடலில் ஜனித்தால், அழியும் உடல் அனந்தமாகத் தொடர்ந்து அழியாத அம்சத்தை நிலைநிறுத்துகிறது.**

நடைமுறையில் மனம் காலத்தை நிகழ்ச்சியால் அளக்கிறது. பட்டம் பெற 5 ஆண்டு ஆனால் காலத்தை நாம் பட்டத்தால் அளக்கிறோம். இடத்தைப் பொருளால் அளக்கிறோம். காலம் கண்ணுக்குத் தெரியாது; பட்டம் தெரியும். இடம் கண்ணுக்குத் தெரியாது; நிலம், மனை கண்ணுக்குத் தெரியும். நிலத்தால் இடத்தை மனம் அளக்கிறது. சித்-சக்திஎன்பது காலமும், இடமுமாகும். அது தூய மனப்பான்மை; அறியாமை கலப்பற்றது. அறியாமை கலந்த மனம் காலத்தை நிகழ்ச்சியாலும், இடத்தைப் பொருளாலும் அளக்கிறது. தூயமனத்திற்கு அந்த நிர்ப்பந்தமில்லை. தூயமனம் நிகழ்ச்சிகளையும் பொருளையும் புறக்கணித்து காலத்தையும் இடத்தையும் அறியவல்லது. துணியில் குறுக்கிழை, நெடுக்கிழை உள்ளதுபோல் காலமும், இடமும் பிரபஞ்ச சக்தியின் ஜீவியத்தில் இரு அம்சங்கள். தூயமனம் மனத்தைவிட உயர்ந்தது. அது முக்காலத்தை ஏற்க வேண்டிய அவசியமில்லை. மனம் காலத்திற்குட்பட்டது. காலம் தூய மனத்திற்குட்பட்டது. அகண்ட, முடிவற்ற, அனந்தமான முக்காலம் தூய மனத்தின் பார்வையில் அடங்கும் ஒரு புள்ளி. அதே மனம் இடத்தையும் அதேபோல் உட்கொண்டது. மனிதமனம் இடத்திற்குட்பட்டது. மனித மனத்திற்கு இடம் பரந்து, விரிந்த, அகண்டமான அனந்தம்; தூயமனத்திற்கு இடமும் ஓர் புள்ளி. காலம் தூயமனத்தின் அகம்என்பதுபோல் இடமும் அதற்கு அகமே. எதுவும் தூயமனத்திற்குப் புறமில்லை. 50 கோடி கம்பனி 1000 ஏக்கரில் அகண்டு, கட்டடமாக விரிந்து, நாடு முழுவதும் மார்க்கட்டாகப் பரவியிருந்தாலும் பணம்என்ற நோக்கில் ஒரு செக்கில் 50 கோடி ரூபாய் அடங்கும். பணம் பெரியது; கம்பனி சிறியது. பிரபஞ்சம் தன்னையறியும் ஐக்கியமுடையது. அது அழிவற்றது. ஏதோ ஒரு சமயம் நாம் அதை உணருகிறோம். அந்த நோக்கில் காலமும், இடமும் எப்படித் தெரியும்என இப்பொழுது கேட்க முடியாது. ஏனெனில் நமக்குத் தெரியாததை இல்லையெனக் கூறும் அறிவு நமக்குண்டு.

### Page 134 / Para 5:

சத்தியஜீவியம் அனைத்தையும் தழுவுவது. அது முக்காலத்தையும் ஒரே பார்வையில் காணவல்லதுஎன நாம் அறிவது இங்கு அவசியம்.



எழுதும்பொழுதும், டைப் அடிக்கும்பொழுதும் ஓர் எழுத்தாகத்தான் அடிக்க வேண்டும். வேகம் அதிகமானாலும் பல எழுத்துகளை ஒரே சமயத்தில் எழுத முடியாது; அடிக்க முடியாது. மனம் காலத்தில் நிகழ்ச்சிகளை அப்படிக் காண்கிறது. அச்சடிக்கும்பொழுது ஒரு பக்கம் முழுவதும் ஒரே சமயத்தில் அடிக்க முடியும். ஜெராக்ஸ் செய்வதும் அப்படியே. சத்தியஜீவியம் ஜெராக்ஸ் போலவும், அச்சடிப்பது போலவும் செயல்படுகிறது. காலம்என்பது இல்லை எனில் அசைவு இல்லை. அசைவில்லாவிட்டால் முன்னேற்றம், அபிவிருத்தி இல்லை. சிலைபோல, சித்திரம்போல நிரந்தர அழகிருக்கும். காலம் வீடியோ போல் தொடர் நிகழ்ச்சியாகும். உலகில் நிகழ்ச்சிகள் தொடர்கின்றன. ஒரு நிகழ்ச்சியினின்று அடுத்த நிகழ்ச்சி சுமுகமாக எழுவதைக் காண்கிறோம். தனக்குமுன் போனநிகழ்ச்சி இந்நிகழ்ச்சியுள் மறைந்து உள்ளதையும் காண்கிறோம். காலத்தின் அசைவே இதற்குக் காரணம். சென்றதைத் தன்னுள் மறைத்து, வருவதைத் தன்னுள் புதைத்து, இரண்டையும் சுமுகமாகத் தாங்குவது காலம். பகுக்கப்பட்ட இடமில்லா-விட்டால் என்ன ஆகும்? நிகழ்ச்சிகட்குள் தொடர்பிருக்காது; மோதல் இருக்காது - அனைத்துமிருக்கும்; அசைவிருக்காது; அசைவால் ஏற்படும் அபிவிருத்தி இருக்காது. கவியின் மனத்துள் காவியம் புதைந்துள்ளதைப் போல் இடமற்ற சுயஜீவியம் முழுமையாக அகத்திற்குரியது. கனவுலகமாக மனத்துள் மறைந்திருக்கும். கவியோ, காவியமோ வெளிப்படாது. வெளிப்பட்டு அனைவரும் காண முடியாது. காலம் மட்டுமே உண்மையானால், சங்கீதம் போல் ஒரு ஸ்வரத்தைத் தொடர்ந்து அடுத்தது வருவதுபோல் அகத்துள் இயல்பாகக் கவியின் மனம் திரைபோல் காட்சிகள் உள்ளேயெழும். ஆனால் நாம் காண்பது ரூபமும் சக்தியும் இணைந்த ஒன்று. தொடர்ந்து சக்தி ரூபமாக, நிகழ்ச்சியாக எழுகின்றது. இடமின்றி இது நிகழாது.

### Page 135 / Para 6:

காலம் மாறும்பொழுது கொடுமையழிகிறது, வசதி வருகிறது, பணம் பெருகுகிறது, அடிமைத்தனம் அழிந்து சுதந்திரம் வருகிறது, இருள் நீங்கி ஒளி பெருகுகிறது, பிணக்கொழிந்து சுமுகம் மலர்கிறது. கடந்த

ஆயிரமாயிரம் ஆண்டுகளில் வந்த மாற்றங்கள் காலம் இடத்தில் உண்டு பண்ணிய மாற்றங்களாகும். மனம் அவற்றை மோதல்களாக அறியும். இயல்பான சுமுகமாக அறியாது. உண்மையில் அகத்துள் இயல்பான சுமுகம் இடைவிடாது எழுந்து கனிகிறது. புறத்தோற்றமான காலத்தின் பார்வைக்கு சுமுகம் பிணக்காகத் தோன்றுகிறது. அகத்தின் சட்டம் முழுமைக்குரிய சுமுகம். புறத்தின் போக்கு பகுதிகளின் தொடர் நிகழ்ச்சி. அகநிகழ்ச்சியின் சுமுகம் புறப்பார்வையின் தோற்றத்திற்குப் பிணக்கு. சத்தியஜீவியப் பார்வை அகத்திற்குரியது. புறத்தையும் தன்னுட் கொண்ட அகத்திற்குரியது. புறத்தில் மனம் பகுதிகளின் அசைவைப் பகுதிகளின் நோக்கில் பிணக்காகக் காண்கிறது. அகம் சத்தியஜீவியம். அது முக்காலத்தையும் தன்னுட் கொண்ட வளரும் சுமுக இயல்பு. அது பல கோணங்களில் பகுதிகள் முழுமையை நாடுவதைக் காண்பதால் அதன் சுமுகம் இயல்பானது; பிறப்பில் உள்ளது. மேலும் மனம் பகுதியைப் பார்ப்பதால் பல வகையாக மோதல் எழுவது மனத்திற்கு இயற்கையாகத் தோன்றுகிறது. அது குழப்பத்தைக் காண்கிறது. சத்தியஜீவியம் தெய்வீகமானது. காலத்தையும், இடத்தையும், மனத்திற்குத் தோன்றும் எல்லா வாய்ப்புகளையும், மனம் அறியமுடியாத மற்ற நிலைகளையும் சத்தியஜீவியம் குழப்பமின்றி, தவறின்றி, தடுமாற்றம் இன்றி காணமுடியும். ஏனெனில் சத்தியஜீவியத்திற்கு அடிப்படையான சரியான தொடர்பு தெரியும்; முறையான சக்தி தெரியும்; அடிப்படை அவசியம் தெரியும்; படிப்படியாக எழும் நிலைகளும், முடிவான கட்டமும் தெரியுமாதலால் அதன் பார்வை சுமுகமானது. முழுமையாகப் பார்க்கவோ, நிதானமாகப் பார்க்கவோ மனத்தால் முடியாது. ஆனால் பிரபஞ்சத்தைக் கடந்த சத்தியஜீவியத்தின் இயல்பே அது.

**Page 135 / Para 7:**

சத்தியஜீவியத்திற்கு திருஷ்டியுண்டு. மனம்போலன்றி அது தன்னை அறியவல்லது. அதனுடைய சக்தியும் அதையறியும். நாம் நமக்குத் தெரிந்த கதையைச் சொல்லும்பொழுது ஒவ்வொரு கட்டத்தையும் நாம் முன்பே அறிவோம். ஆனால் கதையை 50 முறை சொன்னால் ஒவ்வொரு முறையும்



சொல்லும் பாணி சற்று மாறும். அது நம்மையறியாமல், நம்மை மீறி எழுவது. அது தன்னையறியாத நிலை. கதை தன்னையறிந்த நிலை. மனம் ஒரு வீடு கட்டப் போனால் வீட்டின் திட்டம் பல முறை மாறும். ஏனெனில் மனம் தன்னையறியாது. சத்தியஜீவியம் வீடு கட்டப் போனால், என்ன இனி வரப்போகிறதுஎன்பதை விவரமாக முன்கூட்டியறியும். முன்கூட்டியறிவது, தன்னையறிவது. தன்னையறிவது ஒளியாக உள்ளே உறைகிறது. அதன் சக்தி சிருஷ்டிக்கிறது. சக்தி சிருஷ்டிப்பது ரூபம். ரூபத்துள் ஒளி வதிகிறது. அது சுயம்பிரகாசமுள்ளது. பிரபஞ்சத்திலுள்ள எல்லா சக்திகளிலும், ரூபங்களிலும் இவ்வொளி புதைந்துள்ளது. நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. நம் செல்லில் குரோமஸோம் உள்ளன; ஜீன்கள் இருக்கின்றன. முடியின் நிறம், நீளம், பல்லமைப்பு, குரல், இருதயத்தின் பரிமாணம், நகத்தின் தடிப்புஎன உடலில் ஆயிரம் பகுதிகட்கு ஆயிரமாயிரம் குணங்கள் உள. இவை ஒவ்வொன்றும் ஒரு குரோமஸோமால் நிர்ணயிக்கப்படுகிறது. அதன் பின் உள்ளது இந்த சத்தியஜீவியப் பிரகாசம். ரூபம், சக்தி, செயல் ஆகியவை இவற்றால் சுதந்திரமாக, முடிவாக நிர்ணயிக்கப்படுகின்றன. ரூபம் மாறவேண்டும்என இது வற்புறுத்தும். மாறும் ரூபத்தின் அளவை அது நிர்ணயிக்கும். தன் செயலுக்கு வேண்டிய சக்தியை இது சேர்க்கிறது, விநியோகம் செய்கிறது, அடிக்கடி மாற்றியமைக்கிறது. இத்தனையும் அதன் முதற் சட்டப்படி நடக்கின்றன. இந்த சக்தி எழும்பொழுதே, இந்த ரூபம் பிறக்கும்பொழுதே இதன் சுயஞானம் அவற்றை முடிவுசெய்துவிடுகிறது. ஈஸ்வரனாக பிரபஞ்ச வாழ்வில் அனைத்தின் இதயத்துள் இது வீற்றிருக்கிறது. ஓர் இயந்திரத்தை இயக்குவதுபோல் மாயை இவற்றைச் செலுத்துகிறது. தெய்வ திருஷ்டியாக உள்ளிருந்து அவற்றைத் தழுவுகிறது. தம் பொருள்களை பல்வகையாக அமைத்து, ஒவ்வொன்றும் தானெப்படிச் சரியாக அமையவேண்டுமோ அப்படி யுகாந்த காலமாக அமைக்கிறது**.

---

** கோர்ட்டுக்குப் போனால் அங்கு நடப்பவை அனைத்தும் சட்டப்படி நடக்கும். என்று கேஸ் எடுப்பது என்பது நம் இஷ்டப்படி முடியாது. கோர்ட் சட்டப்படி வாய்தா போடுவார்கள். யார் பேசுவது என்பதை கோர்ட் தீர்மானிக்கும். எந்த வக்கீல் எது சொன்னாலும், அதெல்லாம் செல்லாது. ஜட்ஜ் சொல்வதே சட்டம். ஜட்ஜ் பேசுவதும் சட்டத்திற்குட்பட்டது. அவரிஷ்டப்படி பேசமுடியாது. கேஸ் எடுப்பது, விசாரணை செய்வது, வாதம் செய்வது, தீர்ப்பு சொல்வது, டிக்ரி செய்வது, ஜப்தி செய்வது, அப்பீல் செய்வது, தஸ்தாவேஜு தருவது, எடுப்பது அனைத்தும் சட்டப்படியே நடக்கும். செயலுக்குள் ஏற்கனவே உட்கார்ந்துள்ள சட்டம், அதன் பார்வைப்படி அனைத்தையும் நடத்திச் செல்லும்.

## Page 136 / Para 8:

உலகில் உயிருள்ள ஜீவராசிகளுண்டு, உயிரற்றவையுண்டு; மனம் தெளிவானவருண்டு, மனத்தில் தெளிவற்றவருண்டு. அவர்களுடைய ஜீவன் அவற்றுள் உள்ள ஜோதியால் ஆளப்படும். அவற்றின் செயல்களும் அப்படியே. நமக்கு அவை தெரிவதில்லை. எனினும் அவை பிரபஞ்சத்தையறியும். அவை ஜடமல்ல; அவை தம்மை அதிகமாக ஆழ்ந்தறியும். அறிவற்ற பலவும் அறிவால் செயல்படுவது தெரியும். தாவரம் ஆழ்மனத்தாலும், விலங்கும் மனிதனும் அரைகுறை மனத்தாலும் செயல்படுகின்றார்கள். அது முழுஎண்ணத்தால் நடக்கிறது. பொருள்களையும், ஜீவன்களையும் நடத்துவது மனத்தின் அறிவன்று; தன்னையறியும் ஜீவனின் சத்தியம் அப்படிச் செயல்படுகிறது. சுயஞானம் சுயவாழ்விலிருந்து பிரியாத இடத்தில் அப்படிச் செயல்படுகிறது. என்ன செய்வதுஎன நினைத்து திட்டமிட்டு சத்தியஜீவியம் செயல்பட வேண்டாம். தன் மாசுபடாத சுயதிருஷ்டியால் செயல்படும். தன்னைப் பூர்த்தி செய்துகொள்ளும் பிரபஞ்ச வாழ்வு தவிர்க்கமுடியாத ஒரே சக்தி. அதனால் அது அப்படிச் செயல்படும். மனத்தின் அறிவு ஜீவியத்தின் பிரதிபலிப்பு. அது அறியாது; அறிய முனைகிறது. அதனால் அது நினைத்து, அறிந்து, செயல்படவேண்டும். காலத்துள் அது படிப்படியாக உயர்ந்த ஞானத்தைப் பின்பற்றுகிறது. அந்த ஞானம் என்றும் உண்டு. அது முழுமையான ஞானம். அது காலத்தைத் தன் பிடியில் வைத்துள்ளது. முக்காலத்தை ஒரே பார்வையில் காணவல்லது.

## Page 136 / Para 9:

தெய்வீக சத்தியஜீவியத்தின் முதற் சட்டம் இதுவே: அனைத்தையும் தழுவும், அனைத்தையும் ஊடுருவும், அனைத்துள்ளும் உறையும், பிரபஞ்ச திருஷ்டி அது. அசையாத சுயஉணர்வில் ஜீவன் அகத்துள் காலத்தையும், இடத்தையும் கடந்து அனைத்தையும் தழுவுகிறது. எனவே புறத்துள் செயல் திறனில், சுயஉடலில் காலத்திலும் இடத்திலும் சத்தியஜீவியம் அனைத்தையும் அறியும்.



## Page 137 / Para 10:

இந்த ஜீவியத்தில் அறிபவன், அறிவு, அறியப்படுபவன் ஆகிய மூன்றும் தனித்தனியில்லை; அடிப்படையில் ஒன்றே. நம் மனப்போக்கு இம்மூன்றையும் பிரித்தறியும். பிரிக்காவிட்டால் மனம் அறிய முடியாது. பிரிவினை அதற்குரிய முறை; அடிப்படையான சட்டம். அவையின்றி மனம் செயலற்றுப்போகும், அசைவற்று நிற்கும். நான் என்னையறியவேண்டுமானாலும் இதுபோல் நான் என்னை மூன்றாகப் பிரித்துப்பார்க்கவேண்டும்: நானிருக்கிறேன், நான் அறிபவன், நான் என்னில் எதைக் காண்கிறேனோ அதை நான் என அறிகிறேன். இது நான்; இருப்பினும் இது நானில்லை. என்னையும் நான் அறிவதையும் இணைப்பது அறிவு. இது செயற்கையான செயல். நடைமுறையில் பயன் தரும் சுபாவமுள்ள செயல்என்பது தெளிவு. அடிப்படையான உண்மையை இது பிரதிபலிக்கவில்லைஎன்பது தெளிவு. உண்மையில் அறியும் நான் அறியும் ஜீவியமாகும்; அறிவு அந்த ஜீவியம்; அது நான்; நான் செயல்படுகிறேன்; அறியப்படுவதும் நானே; அதே ஜீவியத்தின் ஒரு ரூபம் அல்லது சலனம். இம்மூன்றும் ஒரே வாழ்வு என்பது தெளிவு; ஒரே சலனமும்கூட. பகுக்கப்பட்டுத் தெரிந்தாலும் பகுக்கப்படாத ஒன்றே. அதனுடைய ரூபங்களால் பிரிக்கப்பட்டு விநியோகிக்-கப்படாதது. அதனுடைய ரூபங்களுக்கு அது விநியோகிக்கப்பட்டதாகத் தோன்றினாலும், அப்படி உண்மையில் விநியோகிக்கப்படாதது. பகுக்கப்படுவதால், ஒவ்வொன்றும் தனித்து நின்று செயல்படுகிறது. இது மனம்பெறும் அறிவு. இதைப் பகுத்தறிவால் அறியலாம், உணரலாம், ஆனால் பலன் தரும் செயலுக்கு நடைமுறை அடிப்படையாகக் கொள்ள முடியாது. இதுவரை அகத்திலுள்ளவற்றைப் பேசினோம்; புறத்திலுள்ளவை உண்டு. அவற்றைப்பொருத்தவரை இந்தச் சிரமம் தாண்டிவர முடியாதது ஆகிறது. புறப்பொருளோடு ஐக்கியத்தை உணருவது முடியாத காரியம். நம் எதிரில் உள்ள சுவரைப் பார்த்து, ‘இந்தச் சுவரும் நானும் ஒன்று’ என்று எப்படிக் கருத முடியும்? அதனடிப்படையில் நடப்பது மனம் அறியாத செயல். சூரியனை உலகம் சுற்றிவருகிறதுஎன்பதை நம் மனம் ஏற்றுக் கொண்டாலும், அதை உணர்வு ஏற்பதில்லை. அதுபோல் புறத்திலுள்ள மரம், மனிதன், கட்டிடம்,

மாடு நம்முள் உள்ளவைஎன ஏற்கலாம்; உணருவது சிரமம்.

## Page 137 / Para 11:

இது ஐக்கியத்தின் சத்தியம். சத்தியஜீவியம் எப்பொழுதும் அடிப்படையாக இந்த சத்தியப்படி நடக்கிறது. மனத்திற்கு இந்த சத்தியம் இரண்டாம்பட்சம். அல்லது தான் முயன்றுபெற்ற திறன், பிறப்பில் ஏற்பட்டது இல்லை. மனத்திற்கு இச்சத்தியம் சொந்த திருஷ்டியில்லை. சத்தியஜீவியம் உலகையும், அதிலுள்ளவற்றையும் ஒரு பகுக்கமுடியாத ஞானத்தின் செயலாகக் காண்கிறது. அப்பார்வையில் வாழ்வு பிரபஞ்ச சுயவாழ்வின் பிறவி அம்சமாக இருக்கும். அமெரிக்காவைப் பற்றி ஏராளமாகப் படித்தவரும், எதுவும் படிக்காதவரும் அங்குப் போனால், மனம் அமெரிக்காவைப் படிக்காதவர்போல் பார்க்கும். படித்தவர்க்கு அங்குக் காணும் ஒவ்வோர் அம்சமும் தான் படித்ததை நினைவுகூர்ந்து அறிவை அனுபவமாக்கி ஆனந்தத்தை எழுப்பும். இது சத்தியஜீவிய திருஷ்டி. இது பூரணமான தெய்வீக ஜீவியம். இதற்கு உறுதி (Will) உண்டு. இது பிரபஞ்ச வாழ்வை வழிநடத்துகிறது; ஆள்கிறது. மேலும் தன் சக்திவாய்ந்த செயலால் பூர்த்திசெய்து பூரணம்பெறச் செய்கிறது. அப்படி பூரணம் செய்யும்பொழுது அதன் ஜோதியின்படி செய்கிறது. இவ்வுறுதி அதன் ஞானத்திலிருந்து வேறுபட்டதில்லை. அத்துடன் ஒன்றியது. அதன் சுயவாழ்வினின்றும் வேறுபட்டதில்லை. ஞானமும், உறுதியும், சுயவாழ்வும் ஒன்றே. பிரபஞ்ச சக்தியும், பிரபஞ்ச ஜீவியமும் ஒன்றேஎனக் கண்டோம். பிரபஞ்ச சக்திஎன்பது பிரபஞ்ச ஜீவியத்தின் செயலாகும். அதேபோல் தெய்வீக ஞானமும், தெய்வீக உறுதியும் ஒன்றே. இரண்டும் ஒரே அளவு; இரண்டும் ஒரே செயல் – வாழ்வின் செயல்.

## Page 138 / Para 12:

நாம் பிரபஞ்சத்தில் வாழ்கிறோம். பிரபஞ்சத்தை மனத்தால் காண்கிறோம். இது பச்சைக்கண்ணாடியால் உலகைக் காண்பதுபோலாகும். உண்மை தெரிய அக்கண்ணாடியைக் களையவேண்டும். மனம் ஆராயும்.



பொருள்களைப் பகுதியாய்க் காணும். பகுதியை முழுமையாகக் கொள்ளும். இது நம் வாழ்வில் அடிப்படைத் தவறு. இத்தவறு விலக்கப்படவேண்டுமானால் நாம் சத்தியஜீவியம் முழுமையானது, பகுக்கமுடியாதது, அனைத்தையும் தழுவக்கூடியது என்பதை வலியுறுத்தவேண்டும். இம்முழுமைக்கு எந்த குந்தகமும் விளைவிக்காமல் அனைத்தையும் தன்னுட்கொள்ளும் என்பது சத்தியம் என்பதை ஏற்கவேண்டும். சர்க்கார் ஊழியர் மக்களுக்கு ஊழியர். மக்கள் அதிகாரி, ஆபீசர் ஊழியர். ஆபீசர்கள் பொதுமக்களை விரட்டுகின்றனர். மக்கள் ஆபீசரைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றனர். தங்களுக்கு வேண்டியதைக் கெஞ்சிக் கேட்கின்றனர். மக்கள் தங்கள் உரிமையைப் பெறவேண்டுமானால் அஞ்சி நடுங்குவதை நிறுத்தவேண்டும். மக்கள் அதிகாரி, ஆபீசர் ஊழியர் என்ற கருத்தை ஏற்கவேண்டும். அதுபோல் பிரபஞ்சம் நமக்கு அதன் உண்மையை வெளியிடவேண்டுமானால், நாம் சத்தியஜீவியத்தின் முழுமையை அறியவேண்டும். மரத்தினின்று விதை எழுகிறது. மரம் விதையிலிருந்து முளைக்கிறது. ஏற்கனவே மரம் விதையுள் உள்ளது. இது ஒரு தவிர்க்கமுடியாத சட்டம். மரம் என்ற ரூபத்தில் இத்தவிர்க்கமுடியாத சட்டம் நிரந்தரமாக வெளிப்படுவதை நாம் ஏற்கிறோம். இந்நிகழ்ச்சியை மனம் நிலையாக ஏற்கிறது. மரம் பிறக்கிறது. வாழ்வு அதன் வழி மலர்கிறது. மரம் மீண்டும் உற்பத்தியாகிறது. இவ்வடிப்படையில் மனம் பகுத்து, தொகுத்து, ஆராய்ந்து விளங்கிக்கொள்கிறது. மரத்தின் மூலம் விதையையும், விதையின் மூலம் மரத்தையும் இயற்கை சட்டமாக நாம் ஏற்கிறோம். இதனால் நாம் எந்த விளக்கமும் பெறவில்லை.

கல்லூரியில் பட்டம் தருகிறார்கள். பட்டம் வேலை பெற்றுத் தரும். இதை நாம் அறிவோம். இதன் பயனை அனைவரும் அடைகிறோம். ஆனால் அடிப்படையில் நாம் முக்கிய விஷயத்தை விட்டுவிட்டோம். தாகூர் பள்ளியிலிருக்கும்பொழுது ஏன் நான் இங்கிருக்கிறேன் என்று தன்னைக் கேட்டார். அறிவு பெற என்று அவர் பெற்ற பதில் அவருக்குச் சரியாகத் தோன்றவில்லை. ஏனெனில் அவர் அங்கு பாடம் படித்தார்; அறிவு பெறவில்லை. அதே கேள்வியை பெர்னார்ட் ஷாவும் கேட்டார். அவர் போன்ற மேதைகள் பட்டத்தை நாடவில்லை; அறிவை நாடினர். பள்ளியை விட்டு விலகினர். அறிவு பெற்று மேதையாயினர். உலகம் பெரியது. சமூகம் அதன்

பகுதி. கல்வியை சமூகம் நமக்களிக்கிறது. அதற்குக் கல்லூரியும், பட்டமும் கருவிகள். பட்டம் அறிவில்லை. நாம் பட்டத்தை உலகினின்று பிரித்து வேலை செய்கிறோம். சமூகம் என்ற முழுமையினின்று நாம் நம்மைப் பிரித்து விலக்கி ஒரு சிறு பயனையடைகிறோம். அப்படிப் பிரிக்காவிட்டால் நாம் உலகம் என்ற முழுமையை அடைவோம். ஷாவைப்போல், தாகூர்போல் நாமும் மேதைகளாவோம். எப்படி காலேஜில் சேருவது, பட்டம் பெறுவது, வேலை பெறுவது என்பவை எவ்வளவு உபயோகக்கரமானதானாலும், அவை வாழ்க்கையை விளக்கப் பயன்படாது. மரமும், விதையும் பிரபஞ்சத்தையும், கடவுளையும் அறியப் பயன்படா.

இரகஸ்யமான, தன்னையறியும் சக்தியை ஆத்மா எனக் கண்டு கொண்டால், அதுவே இந்த ரூபத்தில் உண்மை என்று நினைத்தால், மற்றவை வழக்கமான செயல்களாகத் தெரியும். அப்பொழுது இந்த ரூபத்தை – மரம், விதை – பிரபஞ்சத்திலிருந்து பிரித்துவிடுகிறோம். விலங்கு தன்னை அறியாது. மனிதன் தன்னை அரைகுறையாக அறிவான். விலங்கு தன்னை தனித்த ஜீவனாக நினைக்கிறது. மனிதனும் அப்படியே நினைக்கிறான். இது ஒரு சௌகரியமான ஏற்பாடு. மனம் இதையே முடிவாகக் கொள்கிறது. அதனின்று எல்லா தவறுகளும் எழுகின்றன. வீட்டில் யாரும் இல்லாத நாளில் ஹோட்டலில் சாப்பிடுகிறோம். ஒரு முறை அப்படி சாப்பிட்டபின் அதுவே முறை, சௌகரியம் என தினமும் ஹோட்டலில் சாப்பிட்டால் சரி வருமா? வீட்டில் அனைவரும் அப்படிச் செய்தால் என்ன ஆகும்? ஒரு அவசியத்திற்கு செய்ததை முறையாக ஏற்பது வாழ்வை தடம்புரளச் செய்யும். பிரித்துப் பார்த்தால்தான் மனம் புரிந்துகொள்ளும் என பல சமயங்களில் பிரித்துப் பார்த்தால், அதையே வாழ்வின் முறையாகக் கொண்டால், நாம் உண்மையிலிருந்து விலகுவோம்.

## Page 138 / Para 13:

சத்தியஜீவியம் வேலை செய்வது வேறு மாதிரி. மரம் உலகினின்று பிரிந்து தனித்திருந்தால், அதுவே உண்மையானால், மரம் எழுந்திருந்திருக்காது. நாம் பட்டத்தை முக்கியமாகக் கருதிப் பெறுகிறோம். பட்டம் தனித்த உண்மையானால், நாம் பட்டம் பெற கல்லூரி ஏற்பட்டிருக்காது. நாட்டில் ஞானம் வளர ஏற்பட்டது கல்லூரி. இன்று (training) பயிற்சி அளிக்கப்பட்டால் இலட்சக்கணக்கானவர்க்கு வேலை கிடைக்கும். அதை 1947 முதல் 1967 வரை எவரும் செய்யவில்லை; செய்ய நினைக்கவில்லை. ஒருவருக்கு வேலை பெற பயிற்சி தேவையானால் அவர் அத்தொழிலை நாடி, பஸ் டிரைவர் கிளீனராக ஆரம்பிப்பதுபோல், பயிற்சி பெறவேண்டும். நாடு, மக்கள் ஞானம் பெற ஏற்படுத்திய கல்லூரியை நாம், பட்டம் பெறப் பயன்படுத்துவது நம் வாழ்வை நாமே சுருக்கிக்கொள்வதாகும். ரூபம் என்பது பிரபஞ்ச வாழ்வின் சக்தியைப் பொருத்தது. ரூபம் என்பது பிரபஞ்ச வாழ்வின் சக்தியைப் பொருத்து, மற்ற பொருட்களுடன் உள்ள தொடர்பால் நிர்ணயிக்கப்படுகின்றன. ஒரு கல்லூரியின் தரம் அது உள்ள ஊரால் நிர்ணயிக்கப்படுகிறது. ரூபத்திற்கு தனிச்சட்டம் உண்டு எனில், அது பொதுச்சட்டத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. ஏனெனில் குறிப்பிட்ட சட்டம், பொதுச்சட்டத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு கல்லூரியின் தரம் அது எந்த பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தது என்பதால் நிர்ணயிக்கப்படுகிறது. மரம் விதையை விளக்கவில்லை. விதை மரத்தை விளக்காது. பிரபஞ்சம் இரண்டையும் விளக்கும். கடவுள் பிரபஞ்சத்தை விளக்குவார். சத்தியஜீவியம் மரத்தையும், விதையையும் ஊடுருவி பிரபஞ்சத்தின் முழுஞானத்தில் வாழ்கிறது. அதன் ஐக்கியம் முழுமையானது; பகுக்கமுடியாதது; ஆனால் சந்தர்ப்பத்திற்கேற்ப மாறக்கூடியது. இந்த பூரண ஞானத்தில் தனி மையமில்லை, தனி அகந்தையில்லை. நாம் இன்று அகந்தையெனும் தனித்த மையத்தில் வாழ்கிறோம். அதன் முழுமை அதன் சுயஞானத்திற்கு சமமான வீட்சி. முழுமையில் ஒருமை; பலவாகப் பிரிந்ததிலும் ஒருமையுண்டு. எல்லா இடங்களிலும், எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒருமை நிலைக்கும். இதில் எல்லாம் என்பதும், ஒன்று என்பதும் ஒன்றே. தனிமனிதன் தான் அனைத்துடனும் இணைந்தவன், சத்புருஷனுடன் இணைந்தவன் என்பதை இழப்பதில்லை. ஏனெனில் சத்தியஜீவிய அறிவில் இந்த இரண்டறக் கலக்கும் உணர்வு பிறப்பில் ஏற்பட்டது. சத்தியஜீவிய சுய நிரூபணத்தின் பகுதியது.

50 பேருள்ள கூட்டுக்குடும்பத்தில் பிறந்தவன் தனிமனிதன் எனத் தன்னை அறிவான். என்றாலும் குடும்பத்துடன் அவன் இரண்டறக் கலந்தவன். ஊர் விஷயங்களில் ஊருடன் அப்படிக் கலந்தவன். இருப்பினும்

தான் ஓர் மனிதன் என்ற உணர்வை இழக்காதவன். அங்கு ஒருமை எப்பொழுதும் அழிவதில்லை. ஏனெனில் அவ்வொருமை அவன் ஊருடன் இரண்டறக்கலந்ததில் பிறந்தது. இன்று தனிக்குடித்தனம் சென்றவர் ஊருக்குத் திரும்புவதில்லை; உற்றார், உறவினரை அறியார்; அவர்கள் அக்குடும்பம் ஒன்றிருந்தது என்பதை மறந்துவிட்டனர். எனவே அவர்கள் வாழ்க்கை சுருங்கிவிட்டது. ஊரின் ஆதரவு அவர்கட்கில்லை.

## Page 139 / Para 14:

தாம்பரம் கிறிஸ்துவக் கல்லூரியில் பாயிட் என்ற பிரின்ஸ்பால் ஓய்வு பெறும்பொழுது அவருடைய பழைய மாணவர்கள் ஹைதராபாத், டெல்லி, பம்பாய், இலண்டனிலிருந்து வந்து விழா கொண்டாடினர். அனைவரும் அகில இந்திய உத்தியோகம் வகிப்பவர். எவ்வளவு நாளானாலும், எங்கிருந்தாலும் பழைய பேராசிரியர், பழைய கல்லூரி அவர்கள் மனத்தில் உள்ளது. அவர்கள் அந்த ஒற்றுமையை, ஒருமையை இழக்கவில்லை. அவர்கள் அனைவரும் பெரிய அந்தஸ்திலிருப்பதற்கு அவ்வொற்றுமை காரணம். அதில்லாத கல்லூரி மாணவர்கள் அப்படி வாழ்வில் உயர்வது இல்லை; அதுபோன்ற விழா கொண்டாடுவதில்லை. அது வெறும் ஒற்றுமை இல்லை; ஒருமையின் அடிப்படையில் ஏற்பட்ட ஒற்றுமை. இந்த ஒருமை காலத்திற்கும், இடத்திற்கும் உரியது. ஜீவன் இவற்றை ஊடுருவுவது, உள்ளுறைவது என்பது அடிப்படையான பூரண ஐக்கியத்தைப் பற்றியது. ஏனெனில் அதிலிருந்துதான் இது வருகிறது. அங்கு மையமோ, எல்லையான பரிதியோ இல்லை. காலத்தையும், இடத்தையும் கடந்த ஒன்று மட்டுமே உள்ளது. தமிழர்கள் டெல்லியிலிருந்தால், அங்கு ஒருவர் வீட்டு விசேஷத்தில் அவர்கள் குழுமியுள்ளபொழுது ஜாதி, மதம், ஊர், ஜில்லா, தொழில் பேதம் இல்லாமல் தமிழர் என்ற அடிப்படை ஒற்றுமை முழுவதும் நிலவியிருப்பதைக் காணலாம். அது தீவிரமாக, ஆழமாக, அர்த்தபுஷ்டியுள்ளதாக, அமிர்த சுவையுடன் அமையும். சத்தியஜீவிய ஒருமையும், ஒற்றுமையும் அத்தகையது. ஹிந்து, முஸ்லீம் வேற்றுமையோ, தீண்டாதவன் என்ற வேற்றுமையோ, பியூன், ஆபீஸர் என்ற வேற்றுமையோ அக்கூட்டத்தில் இருக்காது. சிருஷ்டிக்கு முன் உள்ள பிரம்மம் கனத்தது. கனம் ஒருமையைக் காட்டும்.



சிருஷ்டியில் அது பல பொருள்களை ஊடுருவும் கனத்த சூழலாக, சமமான சூழலாகத் தெரியும். பகுக்கப்படாத ஞானம், பிரபஞ்சத்தில் வெளிப்படாத பிறப்பிலுள்ள ஞானமாக மாறும். எந்த லீலையும், எந்த பாகுபாடும் இந்த அடிப்படை ஒருமையை, ஒருமையின் அடிப்படையில் ஏற்பட்ட ஒற்றுமையைக் குறைக்கவோ, குலைக்கவோ முடியாது. நம் நாட்டில் ஜாதிக்குள்ள உயர்வு, இங்கிலாந்தில் (aristocracy) உயர்தர மக்களுக்குண்டு. சொத்து அழிந்தாலும், 100 தலைமுறையானாலும், தன் பூர்வீக பெருமையை ஆங்கிலேயன் மறக்கமாட்டான். பேங்க்கை கொள்ளையடிக்க சுரங்கம் வழியாக வரும் திருடனை போலீஸ் பிடித்துவிட்டது. திருடன் ஆக்ஸ்போர்ட் பட்டதாரி; பெரிய குடும்பத்துப் பையன். போலீஸ்காரன் அவன் கையைப் பற்றியபொழுது, “என்னை உன் அழுக்கான கைகளால் தொடாதே. என் உடலில் ராஜவம்ச இரத்தம் ஓடுகிறது. என்னை Sir எனக் கூப்பிடு; please என்று பேச ஆரம்பி” எனத் திருடன் போலீஸ்காரனிடம் கூறினான். கடுகு சிறுத்தாலும் காரம் போகாது. ஸ்ரீ அரவிந்த சூத்திரம் “எல்லாம் பிரம்மத்துள்ளிருக்கிறது. பிரம்மம் எல்லாவற்றிலுமிருக்கிறது. எல்லாம் பிரம்மம்” என்பது. சுயசிருஷ்டியின் ஒரு சத்தியம், பிரிக்கமுடியாதபடி சேர்த்துப் பிடித்துவைத்துள்ளது. இந்த சுய-நோக்கம் அடிப்படை ஞானம். இதிலிருந்தே பிரபஞ்ச லீலை வெளிப்படுகிறது.

## Page 139 / Para 15:

மனம், உயிர், ஜடம் ஆன உலகு எப்படி ஏற்பட்டது? இது தாழ்ந்த ஜீவியம், மனித மனப்போக்கு. பிரபஞ்சத்தைப் பற்றிய நம் கொள்கைப்படி இதை எப்படிக் கூறுவது? உலகில் உள்ளவையெல்லாம் பூரணத் திறமை வாய்ந்த சத்தியஜீவியத்தினின்று வருவது சரியானால், எது இவற்றை உற்பத்தி செய்தது? சத், சித்-சக்தி, ஆனந்தம் என்பவை செயல்படுவதில் சத்தியஜீவியம் ஆரம்பிக்கிறது. இந்தத் திறமை சச்சிதானந்தத்தின் மூன்று அம்சங்களை அதன் தாழ்ந்த பிரதிநிதிகளான மனம், உயிர், உடலாக மாற்றுகிறது. சிருஷ்டி ஞானத்தின் இரண்டாம்பட்சத் திறமையிது. அது தன்னை முன்வைத்து, முகமாக்கி, புரிந்துகொள்ளும் ஜீவியம். அதில் ஞானம் மையமாகி பின்னோக்கிச் சென்று தன் செயலை கவனிக்கிறது.

மையம் என நாம் கூறும்பொழுது சமமான செயல்திறன் சமமில்லாத மூன்று அம்சங்களாகப் பிரிவதை நாம் குறிக்கிறோம். சமமில்லாத திறனெழும் பொழுது தன்னை பிரிப்பது எழுகிறது; அல்லது நிகழ்ச்சி தோற்றமாகிறது.

## Page 140 / Para 16:

முதலில் அறிபவன் தன்னை அறிவில் சேகரம் செய்து அகமாகிறான். தன் ஜீவிய சக்தியை தன்னிடமிருந்து வெளிப்பட்டு தன் ரூபமாகப் போவதாகக் கொள்கிறான். தொடர்ந்து அப்படிச் செயல்படுகிறான். தொடர்ந்து தன்னுள் பின்வாங்கி மறைகிறான். தொடர்ந்து மீண்டும் வெளிப்படுகிறான். இது தன்னைத் தானே சுயமாக மாற்றிக்கொள்வதாகும். இந்த ஒரு மாற்றத்திலிருந்து பிரபஞ்ச நோக்கங்கள், பிரபஞ்ச செயல்கள், அவற்றிற்குள்ள நடைமுறை வேறுபாடுகளனைத்தும் எழுகின்றன. அறிபவன், அறிவு, அறியப்படுவது என்பவற்றிடையே ஒரு யதார்த்த வேறுபாடு எழுந்தது. ஈஸ்வரன், அவன் சக்தி, அவனது சிருஷ்டி என்பதும் அதுவே. அனுபவிப்பவன், அனுபவம், அனுபவிக்கப்படுவது; பிரம்மம், மாயை, மாயையின் சிருஷ்டி என்பவையும் அவையே.

## Page 140 / Para 17:

சத்புருஷன் ஞானத்தில் தன்னை நிறுத்தியுள்ளான். இது புருஷன் சக்தியை கவனிப்பதாகும்; ஆள்வதாகும். இந்த சக்தி புருஷனிலிருந்து வெளிப்பட்டது. புருஷன் தன் சக்தியை - ஜீவிய சக்தியை - தொடர்கிறான். அது வேலை செய்யுமிடத்தையடைகிறான். அங்கு பகுக்கும் செயலை மீண்டும் செய்கிறான். பிரக்ஞா பிறந்தது அந்த பிரிவினையில். இப்புருஷன் ஒவ்வொரு ரூபத்திலுமிருக்கிறான். தன்னை மற்ற ரூபங்களில் காண்கிறான். நடைமுறை, செயற்கை மையத்தினின்று அவன் சக்தியால் காண்கிறான். எங்கும் அது ஒரே புருஷனே; ஒரே தெய்வீக ஜீவனே. பல மையங்கள், லீலை ஏற்பட ஏற்படுத்தப்பட்ட வித்தியாசம். அடிப்படையான ஐக்கியத்தின் பேரில் பரஸ்பர ஞானம், பரஸ்பரம், பரஸ்பர மோதல், பரஸ்பர அனுபவம் ஆகியவை ஏற்பட்டன.



## Page 141 / Para 18:

எல்லாவற்றையும் ஊடுருவும் சத்தியஜீவியம் புது நிலையை ஏற்றது. இது ஐக்கியத்தினின்று மேலும் விலகிய நிலையாகும். பிரபஞ்சம் நிலைபெற அவசியமான பகுக்கமுடியாத ஜீவியம், விலக்கமுடியாத ஒற்றுமை ஆகியவற்றிலிருந்து இப்படி விலகிற்று. சற்று மேலும் இதைத் தொடர்ந்தால், இது அவித்தையாகும். அடிப்படை சத்தியம் ஆயிரம் பாகங்களானபொழுது இப்பெரிய அஞ்ஞானம் உற்பத்தியாயிற்று. மீண்டும் அவ்வைக்கியத்தை அடைய பொய்யான ஐக்கியமான அகந்தையில் ஆரம்பிக்கவேண்டும். தனி மனித மையத்தை நாம் ஏற்றவுடன், மனஉணர்ச்சி, மனஅறிவு, மனச்செயல், அவற்றைத் தொடர்வன அத்தனையும் அவசியமாக எழும். சத்தியஜீவியத்தில் ஆத்மா செயல்படும்வரை அஞ்ஞானமில்லை. செயலுக்கும், அறிவுக்கும் உள்ள அரங்கம் சத்தியஜீவியம், அடிப்படை ஒற்றுமை.

## Page 141 / Para 19:

பிரம்மம் தன்னை அனைவரிலும் உள்ள புருஷனாகக் கருதுகிறது. அனைத்தும் தன் சிருஷ்டி, அனைத்தும் தானே என அறிகிறது. ஈஸ்வரன் செயலில் உள்ள சக்தி தான் என அறிவார். ஒவ்வொரு ஜீவனும், ஆத்மாவில் தான் என்றும் அறிவார்; ரூபத்திலும் தானே. ஆயிரம் ஜீவன்களிலும் அனுபவிப்பவன் அனுபவிப்பது தன்னையே எனவும் அறிவார். ஒரு மாற்றம்; பல மையங்கள் ஏற்பட்டுள்ளன. சக்தியை ஆயிரமிடத்தில் விநியோகித்துவிட்-டோம். நடைமுறையில் ஜீவியம் மாறும். அடிப்படையான சாரத்தில் பிரிவினை இல்லை; மாற்றமில்லை. நம் மனப்போக்கைத் தயார் செய்ய சத்தியஜீவியம் வருகிறது. இன்னும் தயார் செய்யவில்லை. மனத்தை அதன் ஆதியில் அறிய இவ்விஷயத்தை - சத்தியஜீவியம் நம்மைத் தயார் செய்வதை - ஆராய வேண்டும். அகன்று, பரந்த சத்தியஜீவியம் பிரிவினையான அஞ்ஞானத்துள் வழுக்கிவிழுந்த இடத்தை நாம் காணவேண்டும். இந்த பிரக்ஞா நம்மருகிலிருப்பதால், நமக்கு சத்தியஜீவியத்தைவிட எளிதில் புரியும். இதுவரை சத்தியஜீவியத்தைப் பற்றி பிடிபடாதவற்றைப் பேசினோம். மனத்தின் செயல்பாடுகள் எளிமையானவை. அறிவால் செயல்பட்டால்

சத்தியஜீவியம் சிரமமாக இருக்கும். நாம் கடக்கவேண்டிய எல்லையான தடை அவ்வளவு சிரமமானதல்ல.

## THE SUPREME TRUTH CONSCIOUSNESS
## உயர்ந்த சத்தியஜீவியம்

ஒவ்வொரு பாராவில் உள்ள கருத்தின் சுருக்கம்:

132/1: சத்தியஜீவியம் சச்சிதானந்தத்தின் சுபாவம். சத்தியஜீவியத்தின் பொதுவான மனோதத்துவ சத்தியம் இங்கு கருதப்படுகிறது.

132/2: சத்தியஜீவியம் பிரபஞ்சத்தில் லீலையில் ஒழுங்கை நிலைநாட்டும் சக்தி. இது சுமுகத்தாலும், முழுஎண்ணத்தாலும் இதைச் சாதிக்கிறது.

133/3: இதற்கு காலமும், இடமும் தேவை. காலமும், இடமும் தொடர்பு கொள்வது (causality) காரணகாரியம்.

134/4: காலம், இடத்தை கணிப்பது மனம். மனத்தைவிட உயர்ந்த ஜீவியத்திற்கு காலமும், இடமும் ஒரு புள்ளி.

134/5: காலமில்லாவிட்டால் முன்னேற்றமிருக்காது; சலனமற்ற சுமுகம் இருக்கும்.

135/6: அகத்தில் காலத்தில் உருவாகும் நிகழ்ச்சிகள் புறத்தில் இடத்தில் பரிணமிப்பது மனத்திற்குப் பிணக்காகவும், சிக்கலாகவும் தோன்றுகிறது. சத்தியஜீவியப் பார்வைக்கு அவை இயல்பான பிரம்ம சுமுகம்.

135/7: இச்சுமுகம் பிறப்பில், அடிப்படையில், ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், உள்ளிருந்து அவற்றை இயக்குகிறது.

136/8: சத்தியஜீவியம் முக்காலத்தையும் தன் முழுப்பார்வையில் கொண்டு வரும்.

136/9: சத்தியஜீவியத்தின் முதற்சட்டம் பிரபஞ்ச சிருஷ்டி.

137/10: நாம் நம்மையறிதல், நான், அறிவு, அறிவால் அறியப்படும் நான் எனப் பிரியவேண்டியிருக்கிறது. மனத்திற்குத் தேவையான இந்த தற்காலிக ஏற்பாட்டை மனம் முடிவாகக் கொள்ளுதல் தவறு.

137/11: சத்தியஜீவியத்திற்கு மனத்திற்குள்ள இக்குறையில்லை.

138/12: மரம் விதையிலிருந்து வருவதை ஆராய்வது பயன் தராது. மனிதன் மனத்தால் உலகிலிருந்து பிரிந்து சுருங்குகிறான்.

138/13: மரத்தையும், விதையையும் பிரபஞ்சம் விளக்கும். பிரபஞ்சத்தை கடவுள் விளக்குவார்.

139/14: "பிரம்மத்தில் அனைத்தும் உள்ளன. பிரம்மம் அனைத்திலும் உள்ளது. அனைத்தும் பிரம்மம்".

139/15: (Apprehending Supermind) பிரக்ஞா மனம், உயிர், உடல் என்ற முதல் பிரிவினையை ஏற்படுத்துகிறது.

140/16: அறிபவன், அறிவு, அறியப்படுபவன் என்ற பிரிவினை ஏற்படுகிறது.

140/17: புருஷன் பிரகிருதியுள் சென்று பிரிவினையுள் ஒற்றுமையாகிறான்.

141/18: ஆத்மா சத்தியஜீவியத்திலிருக்கும்வரை அஞ்ஞானம் ஏற்படுவது இல்லை.

141/19: புருஷன் சிருஷ்டியில் பிரிந்த ஆயிரம் பொருள்களில் தன்னை வெளிப்படுத்துவதில் தன் ஒருமையையோ, ஒற்றுமையையோ இழப்பதில்லை. அடுத்துவரும் - பிரக்ஞா - அத்தியாயங்கள் எளிதானவை.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மனிதனுடைய அன்புக்கு அன்னை தம்மை முழுவதும் கட்டுப்படுத்திக்கொள்கிறார்.

***மனிதனுக்கு அடிமையான தெய்வம்.***

## P.75-76 He read the original ukase kept back.

**மறைவான முதல் உத்தரவைப் படித்தான்.**

- ✡ ஆத்மா அந்தரங்கத்தில் பூட்டிவைக்கப்பட்ட மூலங்கள்.
- ✡ வீரியமான முத்திரை தெரிந்தது.
- ✡ படமெடுக்கும் நலிந்த சக்தியின் விவேகம்.
- ✡ அறியாமையில் செதுக்கும் ஞானத்தின் படிகள்.
- ✡ நித்திரையில் தெய்வம் சாகாவரம் பெற்ற கண்களைத் திறந்தது.
- ✡ ஆத்மாவற்ற ரூபங்களின் உருவமற்ற சிந்தனைகள்.
- ✡ ஆத்ம உணர்வு ஜடத்தின் கர்ப்பக் கரு.
- ✡ அறியமுடியாததை அறியும் மனத்தின் வீரவேட்கை.
- ✡ அதன் பொற்செல்வத்தை வயிற்றில் வளர்க்கும் வாழ்வு.
- ✡ ஒளியில் பிரவாகமாக எழும் வெற்றிடமான எண்ணங்கள்.
- ✡ ஆத்மாவின் அறிகுறியால் உலகை உணர்பவன்.
- ✡ புறத்தின் புத்தகத்தை அகத்தில் படித்தான்.
- ✡ புதிர் கட்டவிழ்கிறது; முடிச்சான சிக்கல் வழிவிடுகிறது.
- ✡ பெரிய ஜோதி பெருநெறியில் சுடர்விடுகிறது.
- ✡ போக்கை இழந்த காலத்தின் மறைபொருளான இலக்கு.
- ✡ தற்செயலாய் தடுக்கி விழும்பொழுது கருவான கருத்து எழுந்து நோக்கும்.
- ✡ ஊமை உலகின் உள்வெளியை காத்திருந்த கடவுள் கலம் நிறைய நிரப்புகிறார்.
- ✡ சூன்யத்தில் அனைத்தையும் வெல்லும் அனந்தன் அரச கொலு வீற்றிருக்கிறான்.



- ✡ உறுதியும் நம்பிக்கையும் மலையெனயெழுந்து இதயத்தை நிரப்பின.
- ✡ அமானுஷிய ரூபத்தைச் சுவடாகக் காண்கிறான்.
- ✡ ஊனக்கண் அறியாத ஆத்மாவின் உயர்வை அவன் பார்வை நாடும்.
- ✡ புதிய பொன்னுலகைக் கீழே கொணர முயன்றான்.
- ✡ மின்னலாக அவன் கண்ட பொன்னான அற்புதம் அவன் புகலிடம்.
- ✡ சொர்க்கலோகச் சூரியன் ஒளிப்பிரவாகம் வரக் காத்துள்ளது.
- ✡ இருண்ட அறையும் அதன் இருளடர்ந்த படிக்கட்டும்.
- ✡ சிசுவான ஆத்மா சிறிய குழந்தைப் பள்ளியில்.
- ✡ அறியாத பாடத்தை அறிவிக்கும் பொருள்கள்.
- ✡ அறிவின் அங்க லக்ஷணத்தை அவிழ்த்தெறிந்தான்.
- ✡ புவியின் இயற்கை-கலையை இயல்பாக ஏற்க முன்வந்தான்.
- ✡ மனிதச்சொல் தெய்வப் பாஷையாயிற்று.
- ✡ சத்தியத்தை உயிரின் உருவங்களில் காண முயன்றான்.
- ✡ அனந்தத்தின் அலங்காரக் கோடுகளை அறிய முயன்றான்.
- ✡ இயற்கையின் சொந்த சத்தியம் அதன் பூர்வீக இலட்சியம்.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

வக்கிரம், அன்னை ஜீவியமாக மாறவேண்டுமென பிரார்த்திப்பது ஆர்வம். வக்கிரமே அன்னை ஜீவியமாக முன்வருவது உண்மை (sincerity). அதுவே சரணாகதிக்குரிய முறை.

*வக்கிரம், அன்னை ஜீவியமாக*
*மாறவேண்டுமென பிரார்த்திப்பது ஆர்வம்.*

# செல்வ வளத்தின் சின்னங்கள்

N. அசோகன்

மனிதர்களை இரு வகைகளாகப் பிரிக்கலாம். வழிகாட்டுபவர்கள் ஒரு வகையினர். பின்பற்றுபவர்கள் இரண்டாம் வகையினர். முதலாமவர்கள் குறைவாகவும், இரண்டாமவர்கள் அதிகமாகவும் உள்ளார்கள். முன்னோடிகள், புதிய பாதைகளை வகுத்துத் தருகின்றார்கள். மற்றவர்கள் அப்புதிய பாதைகளைப் பின்பற்றுகின்றார்கள். முன்னோடிகளுக்குப் புதிய கருத்துகள் மற்றும் செயல்பாட்டு முறைகள் புரியும். ஆனால் வழிநடப்பவர்களுக்கு, கண்ணிற்குத் தெரியாத சூட்சுமமான கருத்துகள் புரிவதில்லை. கண்ணிற்குத் தெரிகின்ற திடமான விஷயங்கள்தாம் அவர்களுக்குப் புரியும். அவர்களுக்குச் செல்வ வளம்என்ற கருத்தைவிட செல்வத்தின் சின்னமாக விளங்கும் வீடு, கார் மற்றும் நகை போன்ற பொருள்களைப் பற்றி எளிதில் புரியும்.

பணத்திற்காக மனிதன் வேலை செய்வான் என்று நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். வழக்கமான சூழ்நிலையில் இது உண்மையாக இருக்கலாம். ஆனால் புதிய சூழ்நிலையிலும் இது உண்மையாகும்என்று அவசியமில்லை. ஒரு கிராம முன்னேற்றத் திட்டத்தில் ஈடுபட்டிருந்த சேவகர்களால் அவ்வூர் மக்களை ஊக்குவிக்க முடியவில்லை. பாசன வசதியில்லாத நிலங்களுக்குப் பாசன வசதி ஏற்படுத்தும் திட்டம் அது. திட்டத்தைத் தொடங்கியவர்கள் கிணறு வெட்டுவதற்காகக் கடன் கொடுக்க ஒரு தேசிய வங்கியைச் சம்மதிக்க வைத்தார்கள். 1973இல் அப்படியொரு வங்கி முன்வந்ததே வியக்கத்தக்க விஷயமாகும். ஆனால் ஒரு விவசாயிகூட அந்தக் கடனை வாங்கிக்கொள்ள முன்வரவில்லை. யாரேனும் ஒருவர் வெற்றிகரமாகக் கிணறு வெட்டிவிட்டால் மற்றவர்கள் அவரைப் பார்த்துப் பின்பற்றுவார்கள்என்று திட்டம் தீட்டியவர்கள் நம்பி,



ஓர் ஏழை விவசாயியைத் தேர்ந்தெடுத்து, கிணறு வெட்ட உதவினார்கள். அவரும் அதில் வெற்றி கண்டு கிடைத்த தண்ணீரை வைத்துக்கொண்டு அவ்வாண்டு ரூ.23,000 சம்பாதித்தார்.

இதைக் கண்டு ஊரார் பொறாமைப்பட்டார்களேயொழிய பின்பற்ற முன்வரவில்லை. ஒரே ஆண்டில் அந்த ஏழை விவசாயியின் மரியாதை உயர்ந்து, ஊரிலுள்ள இரு பெரும்பணக்காரர்களிடையே தகராறு எழுந்த பொழுது இவர் நடுவராகச் செயல்படும் அளவிற்கு நிலைமை மாறியது. அதைக் கண்டு அதிர்ச்சியடைந்த மற்ற விவசாயிகள் எல்லாம் மறுநாளே கிணறு வெட்டுவதற்கான கடன் வாங்க முன்வந்தார்கள். மனிதன் பணத்தைவிட மரியாதையைத்தான் அதிகம் தேடுவான்என்பதை இவ்வனுபவத்திலிருந்து கிராம வளர்ச்சித் திட்டத்தில் ஈடுபட்டவர்கள் உணர்ந்தார்கள்.

உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் கார் வாங்க வேண்டுமென்று 1930இல் ஹென்றி போர்டு விரும்பினார். அவருடைய தயாரிப்பு முறைகள் குறைந்த விலைக்குக் கார் கிடைக்கும் நிலைமையை உருவாக்கியது. கார் அப்பொழுது கௌரவச் சின்னமாகக் கருதப்பட்டது. கார் வைத்திருப்பவர்கள் மரியாதைக்குரியவராகக் கருதப்படுவார்கள் என்று சாதாரண மனிதனுக்குப் புரிந்தது. நிறைய சம்பாதித்தால் கார் வாங்கலாம்என்று பல அமெரிக்கர்கள் உந்தப்பட்டு அதற்காகக் கடினமாக உழைத்தனர். காருக்காகப் பாடுபட்டவர்களை, காரில்லாமல் பெருஞ்செல்வம் ஈட்டலாமென்ற நோக்கத்திற்கு உழைக்கச் சொல்லியிருந்தால் முன் வந்திருக்கமாட்டார்கள். காரோடு மனிதனால் தொடர்புகொள்ள முடியும். ஏனென்றால் கார்என்பது செல்வத்தின் சின்னமான ஒரு பொருள்.

குடும்ப நலனுக்காக உழைக்கச் சொன்னால் சாதாரண மனிதன் எளிதில் முன்வரமாட்டான். தன்னுடைய உயர்விற்காக உழைக்கச் சொன்னாலும் செய்யமாட்டான். ஆனால் ஸ்கூட்டர் வாங்குவதற்காக அரும்பாடுபடுவான். ஸ்கூட்டர், கார், வீடு, நகை என்ற ரூபத்தில்தான் சாதாரண மனிதனுக்குச் செல்வம் புரியும். சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்கள்கூட இப்பொழுது கல்வியின் அருமையைப் புரிந்து

கொண்டுள்ளார்கள். ஆட்டோ டிரைவர்கள், வீட்டு வேலை செய்பவர்கள், காய்கறிக் கடை வைத்திருப்பவர்கள்கூட நிறைய செலவு செய்து, நல்ல தரமான பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்க்கின்றனர்.

பொதுமனிதனுக்கு விழிப்புணர்வு வந்துவிட்டதென்பதற்கு இதுவொரு நல்ல அடையாளம். கார் ஒரு பொருள். கல்வி ஒரு திறமை. கார் மற்றும் கல்வியின் அருமையை இன்றுணரும் மனிதன் தன்னுடைய சொந்த முக்கியத்துவத்தை முழுவதுமாக உணர்ந்தால் அவனுடைய முன்னேற்றம் மேலும் விரைவு பெறும்.

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆன்மீகச் செயலுக்கு சூழ்நிலையைப் பூரணமாக நம்பி இருக்கவேண்டும். அதை முழுமையாக அறிவது ஆன்மீக ஞானமான அடக்கம் பெறுவதாகும்.

***சூழலுக்கு அடக்கமென அறிவது ஆன்மீக அடக்கம்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனத்தின் அபிப்பிராயம், உணர்வின் நோக்கம், உடலின் ஆழ்ந்த நோக்கம் ஆகியவை சொரணையாகின்றன. ஆழ்ந்த நோக்கம் உடலின் சொரணையானால் ஆழத்திலிருந்து செயல்படலாம்; தோல்வியில்லை.

***ஆழ்ந்த நோக்கம் உடலின் சொரணை.***



# அன்பர் கடிதம்

*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய!*

வணக்கம்! ஸ்ரீ அன்னையை வணங்கும் கோடானுகோடி பக்தர்களில் நானும் ஒருத்தி. முதலில் அன்னைக்கு என்னுடைய நன்றியை சாஷ்டாங்கமாகத் தெரிவித்துகொள்கிறேன். அவருடைய அருளால்தான் இன்று நான் வாழ்கிறேன். அவருடைய அருளாசிகளை 98ஆம் ஆண்டிலிருந்து பெற்றுவருகிறேன்.

2005-2006ஆம் ஆண்டு என் மகள் 10ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள். நன்றாகப் படிக்கக்கூடியவள். இருப்பினும் மிகமிகக் குறைவாக மதிப்பெண் எடுத்தாள். எனக்கு உயிரையே மாய்த்துக் கொள்ளலாமாஎன்கிற அளவுக்கு மனம் நொந்துவிட்டேன். அன்னையிடம் மன்றாடி வேண்டிக்கொண்டேன்; சமர்ப்பித்தேன். அவருடைய ஆசியால் என் மகள் 70% மார்க்குடன் தேர்வு பெற்றாள். இன்று அவள் +2 Computer, Maths பிரிவில் படிக்கிறாள். இம்முறையும் அவளை அன்னையிடம் சமர்ப்பித்து தினமும் வேண்டுகிறேன்.

சமீபத்தில் அன்னை எனக்கு மறக்கமுடியாத அருளை வழங்கி உள்ளார். நான் 2003லிருந்து ஒரு மெட்ரிகுலேஷன் பள்ளியில் வேலை செய்து வந்தேன். அங்கிருந்த கரஸ்பான்டென்ட் பொதுவாக எல்லா ஆசிரியை-களுக்கும் மேற்படிப்பு படிக்க உதவி செய்கிறேன்என அனுமதி அளித்து, ஊக்கமும் அளித்தார். M.Sc. Chemistry படிக்க ஆசையுடன் இருந்த நான் இச்சந்தர்ப்பத்தை விடக்கூடாதுஎன உடனே Madras University Correspondenceஇல் அப்ளை செய்தேன் (first set நாங்கள்தான் - அக்டோபர் 2000). Practical class is compulsory. அதற்கு என்னுடைய பிரின்சிபால் முதலில் சம்மதித்தார். ஆனால் நான் practical முடிக்குமுன் (இரண்டு நாட்களுக்கு முன்) போன் செய்து மறுபடியும் டிசம்பர் 4இல் சேருமாறு அவரே கூறினார். ஆனால் நேரில் போனபிறகு என்ன காரணத்தினாலோ என்னை பள்ளியிலிருந்து வெளியேற்றிவிட்டார். மிகுந்த ஏமாற்றமும், வேதனையும் அடைந்தேன்.

பிறகு வீட்டிலிருந்தே M.Sc. practical மற்றும் theory தேர்வு எழுதினேன். மனம் மட்டும் மிகவும் வலியுடன் நடந்த விஷயத்தை அசைபோட்டுக்

கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் அதையெல்லாம் விட்டுவிட்டு அன்னையிடம் மன்றாடி பிரார்த்தனை செய்துகொண்டே இருந்தேன். M.Sc. படிப்பு முடிய இன்னும் ஒரு வருடம் உள்ளது. வேறு பள்ளிக்கு வேலையில் சேர்ந்தாலும் இரண்டாம் வருட practicalக்கு விடுப்பு கிடைக்காது என்பது உறுதி. ஆனால் அன்னையின் அருளால் இரண்டாம் வருட seminar cum practical classன் time table வந்தது. இம்முறை ஒவ்வொரு வாரத்தின் கடைசி நாட்களான சனி, ஞாயிறு மட்டுமேஎனக் குறிப்பிட்டிருந்தது. ஜூன் மாதம் முதல் நவம்பர் இறுதி வாரம் வரை சனி, ஞாயிறு மட்டுமே. ஞாயிறு எப்போதுமே விடுமுறை. ஆனால் சனி? வேலைக்கு செல்லாமல் காலத்தை ஓட்டுவது கடினம். அன்னையிடம் மன்றாடி 24 மணி நேர பிரார்த்தனை செய்து, மற்ற தனியார் பள்ளிகளுக்கு அப்ளிகேஷன் எழுதி, நேரில் கொடுத்துவிட்டு வந்தேன். இரண்டு பள்ளிகளிலிருந்து interview வந்தது. ஒரு பள்ளியில் முழுமையான interview முடிந்து, எனக்கு வேண்டிய ஒவ்வொரு சனிக்கிழமை விடுப்பினையும் அளித்து, நான் அன்னையிடம் முறையிட்டதற்கும் மேலான சம்பளத்துடன் வேலை கிடைத்தது. இது அன்னையுடைய ஆசிதான்என ஆனந்தக்கண்ணீருடன் தெரிவித்து கொள்கிறேன். அன்னை எப்போதும் தன் பக்தர்களை துன்பத்தில் நீந்த விடமாட்டார்கள். அன்னைக்கு நன்றியினைச் சொல்ல வார்த்தைகளே இல்லை.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனிதன் கண்மூடியாக தன்னை அறியாமலிருக்கிறான். அவன் ஜீவியம் உள்ளே வளருவதையும் அவனால் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அவன் கண்மூடியாக இருக்கிறான்.

***உள்ளதையும் உணரமுடியாத கண்மூடித்தனம்.***



# ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

N. அசோகன்

**61.** **தண்டனை, தோல்வி, நஷ்டம் மற்றும் ஏமாற்றம் என்று இவையெல்லாம் அறிவில்லாமலும், விழிப்புணர்வு இல்லாமலும், வளைந்துகொடுக்காமலும் இருக்கின்றவர்களுக்கு இம்மாதிரி இருக்கக்கூடாதுஎன்று உணர்த்துவதற்காக வாழ்க்கை கையாளும் முறைகளாகும்.**

**62.** **விழிப்புணர்வு இல்லாமல் சோம்பேறிகளாக இருப்பவர்களுடைய முன்னேற்றத்தை விரைவுப்படுத்துவதற்காக இயற்கை நெருக்கடிகள் மற்றும் சோதனைகளை அவர்கள்மேல் திணிக்கிறது.**

**63.** **பிரச்சினைகளிலிருந்து தப்பிக்க முயல்வது ஒரு நல்ல தீர்வு இல்லை. இப்பொழுது தீர்க்காமல் விடப்படும் பிரச்சினை பின்னர் இதைவிடத் தீவிரமாக திரும்பிவரும்.**

**64.** **எதிர்பார்ப்புஎன்பது நம்முடைய எனர்ஜி மற்றும் கவனத்தையெல்லாம் வீண் தேக்க நிலையில் முடக்கிவைப்பதால் பலன் வருவது தாமதமாகிறது. மாறாக கையில் இருக்கும் வேலையில் நாம் தீவிரமாக ஈடுபடும்பொழுது நம்முடைய எனர்ஜி பயனுள்ள வகையில் செலவாகிறது. அதனால் பலன் கிடைப்பது விரைவு பெறுகிறது.**

**65.** **விறகு அடுப்பு, ஆட்டுக்கல், திரிவிளக்கு போன்றவைகளை இன்று தேவையற்றவைஎன்று விட்டுவிட்டோம். இம்மாதிரியே அன்னையிடம் வந்தபிறகு அன்பர்கள் பிரார்த்தனை பலத்தை ஏற்று ஜாதகம், பணபலம், பதவிபலம் ஆகியவற்றை நம்புவதையும், மருந்து, மாத்திரைகளை நம்புவதையும் விட முன்வர வேண்டும்.**

**66.** **நல்லெண்ணமும் பிறருக்குத் தன்னை வழங்குதலும் அதிர்ஷ்டத்தைக்**

கொண்டுவரக்கூடிய விஷயங்களாகும். ஏனென்றால் இவை இவற்றை வெளிப்படுத்துபவருடைய பர்சனாலிட்டியை விரிவுப்படுத்துகின்றன.

67. சுத்தம், காலம் தவறாமை, சுமுகம் ஆகியவை சூழலை உயர்த்துவதால் கூடுதல் வருமானத்தைக் கொண்டுவருகின்றன. மாறாக, அசுத்தம், காலம் தவறுதல் மற்றும் சமூகக் குறைபாடுகள் போன்றவை சூழலைத் தாழ்த்துவதால் வருகின்ற வருமானத்தைக் குறைக்கின்றன.

68. எந்நேரமும் முகத்தில் புன்முறுவலைத் தக்கவைத்துக்கொள்வது எந்த விதமான சூழ்நிலையையும் நம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரக்கூடிய சக்தி படைத்ததாகும்.

69. நம்முடைய உடைமைகளை நாம் சரியாக கவனித்துக்கொள்கிறோம் என்பதற்கு அடையாளம் நாம் அவற்றை நிறைய உபயோகப்படுத்துவதுதான். எந்தப் பொருளையும் பயன்படுத்தாமல் வைத்திருந்தால் அது பார்ப்பதற்குப் புதியதாகவே இருக்கும். ஆனால் இது நம்முடைய கண்ணோட்டம். ஆனால் அவைகளுடைய கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் தேய்மானம் வந்தாலும் அவை பயன்படுத்தப்படுவதையே விரும்புகின்றன. பயன்படும்பொழுது அவைகளுக்கு கவனம் கிடைக்கிறது. பயன்படுத்தப்படாமல் புதியதாக இருந்தாலும் அவை உதாசீனத்திற்கு ஆளாவதாக எடுத்துக்கொள்கின்றன.

70. நாம் நெடுங்காலக் கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது நம்முடைய முன்னேற்றத்திற்கு ஆதரவாக இருப்பவை நல்ல தொழில் பண்புகள்தாம். ஆதாயத்திற்காகக் குறுக்குவழியில் போனால் இறுதியில் அது சிக்கலில் போய்தான் முடியும்.

71. ஜாக்கிரதை உணர்வு நம்மை விழிப்பாக வைத்திருப்பதால் அது நமக்கு நல்லது செய்கிறது. ஆனால் பயம், கவலை போன்ற உணர்வுகள் நம்முடைய மனஉறுதியைத் தலைகீழாக மாற்றுவதால் நல்லதைவிட நமக்கு அதிகத் தீங்கே செய்கின்றன. நல்ல விஷயங்கள்மேல் நாம் காட்டும் ஆர்வம் அவற்றை நம்மை நாடி வரச் செய்வதுபோல் தீய விஷயங்கள் சம்பந்தமாக நமக்கு வரும் பயமும் இந்தத் தீங்கு எல்லாம் நம்மை நாடி



வரவும் செய்யும்.

72. வாழ்க்கை ஒரு நிலையான பாணியில் போய்க்கொண்டிருக்கும்பொழுது நம் உடம்பு அதன் சௌகரியத்திற்கு ஏற்றவாறு சில பழக்கவழக்கத்தை உண்டுபண்ணிக்கொள்கிறது. ஆனால் நம் வாழ்க்கைச் சூழ்நிலை திடீரென்று மாறினால் சௌகரியமாக இருந்த அதே பழக்கவழக்கங்கள் இப்பொழுது அசௌகரியமாக ஆகிவிடும்.

73. உண்மைஎன்பது ஒரு நேர்கோடு இல்லை. மாறாக, பூகோளம்போல உருண்டையானது. மனித அறிவு ஒரு பக்கத்தைத்தான் பார்க்கக்கூடியது. ஆனால் சத்தியஜீவியம் பல பக்கங்களையும் பார்க்கக்கூடியது. ஆகவே மனித அறிவைவிட சத்தியஜீவியம் உண்மையை அதிகம் சார்ந்துள்ளது.

74. விழிப்புணர்வு குறைந்தவர்கள் வாழ்க்கையில் ஒரு தீவிரமான சுவையை நாடும்பொழுது அடுத்தவர்களைத் திட்டி, துன்புறுத்தி, அந்தத் தீவிரச் சுவையை தேடிக்கொள்கிறார்கள். அதன்படி பார்க்கும்பொழுது கொடுமை என்பது விழிப்புணர்வு குறைவிலிருந்து பிறக்கிறதுஎன்று தெரிகிறது.

75. அடுத்தவருடைய கண்ணோட்டத்தை நாம் ஏற்பதுஎன்பது நம்முடைய அறிவு விரிவடைவதற்கு அடையாளமாகும். அப்படி விரிவடைவது நம் அறிவு சத்தியஜீவியமயமாவதை குறிக்கும்.

76. ஆசை இல்லாத மனிதன் எதற்கும் நகரமாட்டான். ஆகவே அவனை நகர்த்துவதற்காக இயற்கை மனிதனுக்குள் ஆசையை விதைத்தது. ஆசை இல்லாதவன் நகரமாட்டான்என்றால் அதிக ஆசையை வளர்த்துக் கொண்டவன் கூடுதலாக, சுறுசுறுப்பாக இருப்பான். ஆனால் ஆசை குறைந்த நிலை, ஆசை மிகுந்த நிலை, இவை இரண்டுமே தவறான மனநிலைகள்தாம். இயற்கை ஓர் இடைப்பட்ட மிதமான ஆசை நிலையையே விரும்பும்.

77. நம்முடைய பர்சனாலிட்டியில் மனஉறுதிஎன்பது நம் எண்ணங்களை செயல்படுத்தும் சக்திகொண்டது. அறிவு நம்மை வழிநடத்துகிறது. உறுதி செயல்படுத்துகின்றது. உடம்பு நிறைவேற்றுகின்றது.

78. உள்எழுச்சிஎன்பது நம் பகுத்தறிவைத் தாண்டிய மனநிலையைக்

**குறிக்கிறது. ஆனால் விஞ்ஞானம் பகுத்தறிவைத் தாண்டிய நிலையை பகுத்தறிவு அற்ற நிலைஎன்று குறிக்கிறது. விஞ்ஞானம் அதை எப்படி வர்ணித்தாலும் ஆக்கப்பூர்வமான வேலைகள் எல்லாமே உள்எழுச்சியில் இருந்து பிறப்பவைதாம்.**

**79.** **நம் மூளையிலிருந்து அறிவு பிறப்பதாக விஞ்ஞானம் சொல்வது தவறு. மனித அறிவுஎன்பது தானே சுயமாக, சூட்சுமமாக இருக்கின்ற ஒரு சக்தியாகும். அது நம்முடைய மூளையின் வழியே தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. நம் மூளையை முன்னிறுத்தி அறிவைப் பின்னிருத்துவது குதிரைக்கு முன்னால் வண்டியை நிறுத்துவதுபோலாகும்.**

**80.** **உடம்பும் உயிரும் சூட்சுமமான ஒரு கயிற்றால் பிணைக்கப்பட்டுள்ளன. அந்தக் கயிறு அறுபடும்பொழுது உடலும் உயிரும் பிரிந்து இறப்பு நேர்கிறது.**

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

“இலட்சக்கணக்காகப் பிரபஞ்சங்களைத் தன் ஓர் அசைவால் பரமாத்மா நிரப்ப முடியும்” என்று பகவான் சொன்னபொழுது அவர் தாம் பார்த்ததைச் சொல்லவில்லை; தம் நிலையை விவரித்தார்.

***பகவான் நிலை பரமாத்மாவின் நிலை.***

***பரம்பொருளை விளக்கும் பகவான் எழுதுவது சுயசரிதை.***

***The Life Divine பகவான் சொந்த வரலாறு.***

- **சிருஷ்டியை விளக்கும் பகவான் தாம் செய்ததை எழுதுகிறார்.**
- ***The Life Divine*** **பிரபஞ்ச வரலாறில்லை; பகவானின் சொந்த வரலாறு.**





# மலரும் மணமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

மகேஸ்வரி

“அம்மா, என் அக்கா நாலைந்து நாட்களாக நீங்கள் சொல்லியபடியே கொடிரோஸை கொண்டுவந்து வைத்தது. ஆனால், எங்கள் வீட்டில் சண்டை போடுறது அதிகமாயிடுச்சி. கையில் பணமில்லைஎன்று சண்டை. காரணமே இல்லாமல் இரண்டு பேரும் சண்டை போட்டுகிறாங்க. என்ன செய்வதென்று எனக்கு ஒன்றுமே புரியமாட்டேங்கிது. கொஞ்ச நாளைக்கு சண்டையை நிறுத்திட்டாங்கன்னா எப்படியும் மாப்பிள்ளை பார்த்து கண்ணாலம் கட்டிகிடலாம். ஏம்மா இதையும் மீறின பவரான பூ ஏதும் இருக்காம்மா?”

“வீடெல்லாம் சுத்தமா இருக்குமா?” ரோஜா செந்தாமரையிடம் கேட்டாள்.

“என்னம்மா, எங்கள் வீடென்ன அரண்மனையா? ஒத்த ரூம். அதற்குள்ளதான் சமைக்கணும், தூங்கணும். எல்லா சாமான் சட்டியும் குவிச்சி வைச்சிருப்போம்”.

“நீ ஒண்ணு பண்ணு, உன் வீட்டு சாமானையெல்லாம் நல்லா துடைச்சி ஒன்னால முடிஞ்சவரைக்கும் சுத்தமா வை. அலங்காரமா வைக்கணுமின்னு சொல்லலை; சுத்தமா இருக்கணும்”.

“துடைச்சா எல்லாம் போயிடுமுன்னு எங்க ஆத்தா சொல்லும்”.

“ஆனா, எங்கம்மாவுக்கு (மதர்) சுத்தமா இருந்தாதான் வருவாங்க” என்றாள் ரோஜா.

“சரிம்மா, அப்படியே செய்றேன்”.

➳➳➳

“என்னடி அந்திமல்லி, நேற்றே பாலெல்லாம் வாங்கி பிரிஜ்ஜில் வைக்கவில்லையா? காலையிலேயே எங்கள் வீட்டு காப்பிக்கு வந்துவிட்டாயா?” கேலியாகக் கேட்ட மல்லிகையிடம்,

முல்லை தங்கள் முன்னால் நின்ற அந்திமல்லியின் முகமெல்லாம் வியர்த்து வெளிறிபோயிருப்பதைப் பார்த்து, அந்திமல்லியின் கையைப் பிடித்தாள். அதற்குள் சரிய ஆரம்பித்த அந்திமல்லி கீழே விழுந்தாள்.

“மதர், மதர், Peace Mother, Peace Mother” என்று சொல்ல ஆரம்பித்த மல்லிகை, அந்திமல்லியின் முகத்தில் தண்ணீர் தெளிக்க, கண் திறந்த அந்திமல்லி,

முல்லையின் கையைப் பிடித்துக்கொண்டு, “அக்கா, எனக்கு பயமாக இருக்கிறது. அவர் அப்போலோவிற்கு போயிருக்கிறார், இரத்த தானம் கொடுக்க. எனக்கென்னவோ பயமாக இருக்கிறது. என்கூடவே இருங்கள். என்னை விட்டுவிட்டுப் போகாதீர்கள்”.

“ரோஜாக்கா வீட்டிற்கு போன் செய்து கத்தரிப்பூவும், கோழிக் கொண்டையும் இருந்தால் கொண்டுவரச் சொல் முல்லை”.

இரண்டு பூக்களையும் கையில் வைத்துக்கொண்ட அந்திமல்லி அரை மணி நேரத்திற்குபின், “நான் என் வீட்டிற்குப் போகின்றேன்” என்று கிளம்பினாள்.

“மல்லிகை, அவளுக்கு இப்பொழுது தைரியத்தைவிட, பயமின்மையும் தீரமும் (boldness) தேவைப்படுகின்றது. தினமும் சந்திரனிடம் சொல்லி கொண்டுவந்து கொடுக்கச் சொல்” என்றாள் முல்லை.

“அக்கா, நீ பரவாயில்லை. தைரியம் கொடுத்தால் போதும்என்று நான் நினைத்தேன். ஆனால், பயமின்மை இருந்தால் தீரம் வரும். அதன்பின் தைரியம் நன்றாக வேலைசெய்யும்என்பதை அனுபவத்தில் பார்த்து நானும் புரிந்துகொண்டேன்”.

“அந்திமல்லி, நான் ஒன்று சொன்னால் கேட்பாயா?”

“தாராளமாக, மல்லிகை. நீ எதைச் சொல்லி கேட்காமல் இருந்து இருக்கிறேன், சொல்”.

“உன்னுடைய திருமணம் காதல் திருமணம். பெற்றோர்களின் சம்மதம் இல்லாமல் நடந்திருக்கிறது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள்மீது பெரும் நம்பிக்கை வைத்திருப்பார்கள். தங்களை மீறி எதையும் செய்யக்கூடாது என்று விரும்புவார்கள். தங்கள் குழந்தைகளுக்கு எத்தனை வயதானாலும், ஒன்றுமே தெரியாத சின்னஞ்சிறு குழந்தைகள்என நினைப்பார்கள்”.

“ஏனிந்த பீடிகை, சொல்ல வந்ததைச் சொல்”.



“நீ செய்தது சரியா?”

“நாங்கள் இருவருமே அப்பா, அம்மாவை மதிப்பவர்கள். ஆறு வருடங்கள் போராடியிருக்கிறோம். எத்தனையோ விதங்களில் நானும் சரி, சந்திரனும் சரி சொல்லிப்பார்த்து இருக்கின்றோம், கெஞ்சியிருக்கிறோம். இருவரும் பட்ட கஷ்டங்கள், அவமானங்களை யாரிடமும் இதுவரை சொன்னது இல்லை. பெற்றோர்கள் பெற்றோர்களாக நடக்கவில்லை; எதிரிகளாகத்தான் நடந்துகொண்டார்கள். எல்லோருடைய உடம்பிலும் உள்ள இரத்தம் சிவப்பாகத்தான் இருக்கும். ஆனால் என் அப்பா, ‘சந்திரனின் உடம்பில் நல்ல இரத்தம் ஓடவில்லை. அவர் பார்க்கும் மாப்பிள்ளையின் உடம்பில் மட்டும்தான் நல்ல இரத்தம் ஓடும்’ என்றார். எந்த தகப்பனாராவது பெண்ணை, அதுவும் தன் சொந்தப் பெண்ணை, ஆடையேயில்லாமல் அடைத்துவைப்பாரா? அப்படி இருந்தால் பெண் ஓடிப்போக மாட்டாள்என்ற தைரியம். வேண்டாம் மல்லிகை, இந்த விஷயத்தைப் பற்றி மட்டும் பேசாதே! வேறு எதை வேண்டுமானாலும் சொல், தாராளமாக கேட்கிறேன்”.

கம்ப்யூட்டரில் தலையை நுழைத்துகொண்டிருந்த சந்திரன் நிமிர்ந்து பார்க்க,

“சார், நான் 10 நிமிடமாகக் கூப்பிட்டுக்கொண்டேயிருக்கிறேன், தலையை தூக்கவேயில்லை. உங்களைத் தேடி ஓர் அம்மா வந்திருக்கின்றார்கள்” என்றான் கோபி.

“யாரையும் பார்க்க முடியாது, போய்ச் சொல்” என்று கூறிய சந்திரன், மீண்டும் தன் புரோகிராமுக்குள் (programme) கவனத்தைத் திருப்ப முயன்றவன் திடீரென்று, “கோபி, ஒரு நிமிடம் நில். அம்மாவா! என்ன வயசிருக்கும்?” ‘அந்திமல்லி ஏன் ஆபீசுக்கு வந்திருக்கிறாள்! ஏதாவது மீண்டும் பயந்துவிட்டாளா? அப்படியிருந்தால்கூட செல்லில் பேசாமல் ஏன் நேரில் வந்திருக்கிறாள்? என்னதான் பயமோ? காதலிக்கும்வரை எனக்கு தைரியம் சொன்னவள், ஒரு மாதமாக பயம், பயம் என்கிறாள். எதற்கு பயம் என்றால், ‘பயமாக இருக்கிறது’ என்று திருப்பி, திருப்பி சொல்கின்றாள். பயத்தை இவளே ‘வா, வா’ என்று கூப்பிடுகிறாளோ என்று தோன்றுகிறது. என்ன செய்வது என்று புரியவில்லை” நினைத்துக் கொண்டே நடந்தவன் முன்னால் உட்கார்ந்திருக்கும் உருவத்தைப் பார்த்து,

“என்னடா, வாயடைத்து போய் நிற்கின்றாய்? நான் யாரென்றே தெரியவில்லையா? நான்தான் உன்னை பத்து மாதம் வயிற்றில் சுமந்த அம்மா தெய்வநாயகி! இப்பொழுதாவது நினைவிற்கு வருகின்றதா?”

சரமாரியாக கேள்விகளைக் கேட்ட சந்திரனின் காது மூளைக்கு எந்தவொரு தகவலையும் அனுப்பாமல் ஸ்தம்பித்து நின்றது. கண்களோ, காதுடன் சேர்ந்து ஒத்துழையாமை போராட்டத்தை நடத்த ஆரம்பித்தன. வயிற்றிலிருந்து அலை, அலையாக ஏதோவொன்று கிளம்பி இனம் தெரியாமல், எங்கே செல்வதுஎன்று வழி தெரியாமல் தவித்தது. தொண்டை உலர, நின்றால் விழுந்துவிடுவேன்என்று கால்கள் சொல்ல, கையில் கிடைப்பதை பற்றிக்கொள்ளலாம்என்ற கைகளுக்குக் கிடைத்தது தெய்வநாயகியின் கைகள்தாம்.

மூளை, ‘இதுவென்ன கை, கால், கண், காது, வயிறுஎன எல்லாமே stand stillஆக இருக்கிறதே, என்னவாயிற்று இவைகளுக்கு’ என, அவசர சிக்னல்கள் எதையும் எதிர்பார்க்காமல் அனுப்பியவுடன், தொடக்கூடாத மின்சாரத்தைத் தொட்டவன்போல் சந்திரன் கையை எடுக்க நினைத்தான்.

“அம்மா” என்று மெதுவாகச் சொன்னவனுக்கு உடம்பெல்லாம் வியர்க்க ஆரம்பித்தது.

‘‘உன் அப்பாவிற்கு உடம்பு சரியில்லை. அவருக்கு நாளைக்கு ஆப்பரேஷன். நீ என்னுடன் வா” என்றாள்.

அப்பாஎன்று சொல்லியவுடனேயே சந்திரனுக்கு தலை சுற்ற ஆரம்பித்தது. கண் முன்னால் மதுரைவீரன்போல் கையில் அரிவாளுடன், போதை தலைக்கு ஏறியதால் கண்களில் சிவப்புடன், தள்ளாடிய ஒரு உருவம் தோன்றியது.

அதற்குள் தெய்வநாயகி சந்திரனின் கையைப் பிடித்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

➸➸➸

“மல்லிகை, இன்றைக்கு நானும் உன்னுடன் ரோஜாக்கா வீட்டிற்கு மாலை வருகிறேன். மனதே சரியில்லை. முன்பிருந்த அளவு பயமில்லை என்றாலும் ஏதோவொன்று நடக்கப்போகிறதென மனது சொல்கிறது. அமைதியாக ஒரிடத்தில் உட்காரவேண்டும்போல் தோன்றுகிறது. வருகிறாயா, கடற்கரைக்குப் போகலாமா? அலைகளைப் பார்த்துக்கொண்டே இருந்தால் மனது சமாதானம் ஆகும்’’ கைபேசியில் மல்லிகையுடன்



பேசிகொண்டிருந்தாள் அந்திமல்லி.

“சாரி, அந்திமல்லி. இன்றைக்கு எதுவும் முடியாது. எனக்கொரு முக்கியமான நபரைப் பார்க்கவேண்டியிருக்கிறது. பத்து வருடத்திற்குப்பின் இன்றைக்குத்தான் பார்த்தேன். நாளைக்கு நிச்சயமாக நீ சொன்ன இரண்டு இடங்களுக்கும் கூட்டிச்செல்கிறேன்”.

அவசரமாக ஆபீசுக்குக் கிளம்பிகொண்டிருந்த சந்திரனின் கைபேசி இசைக்க ஆரம்பித்தது. இசைக்கு மயங்கி சிறிது நேரத்திற்குபின்தான் எப்பொழுதும் பதில் கொடுக்கும் சந்திரனின்கை இன்று எதையும் எதிர்பார்க்காமல் ‘பதிலை’ அமுக்கியது.

செய்தியைக் கேட்ட சந்திரன் உறைந்தான்.

“அந்திமல்லி, முடியுமானால் நீ ஓர் ஆட்டோவில் ஆபீசுக்குப் போ. இல்லையென்றால், மல்லிகையை உன் ஆபீசில் விடச்சொல். எனக்கொரு அவசர வேலை” சொல்லிக்கொண்டே வண்டியை எடுத்துவிட்டான்.

சாவியைக் கதவிலிருந்து எடுத்த அந்திமல்லி,

‘என்னவாயிற்று இவருக்கு, ஒன்றும் சொல்லாமல் போகிறார். ஒரு நிமிடம் நின்று விஷயத்தைச் சொல்லிவிட்டுப் போகக்கூடாதா? தலைபோகிற விஷயமா? ஒரு வாரமாகவே சந்திரனின் முகம் சரியாக இல்லை. எதுவும் பேசுவதும் இல்லை. சில நாட்களில் எத்தனை மணிக்கு வீட்டுக்கு வருகின்றார் என்றே தெரியவில்லை. இந்த ஆறு மாதங்களில் நடக்காதது எல்லாம் இந்த ஒரு வாரத்தில் நடக்கின்றது. புதுவீட்டில் சந்தோஷமாக இருக்கலாம் என்றால், என்னவென்று தெரியாத கவலையா, பயமா! ஒன்றும் புரியவில்லை’ என்று தனக்குத் தானே பேசிக்கொண்டே ஆபீசுக்குச் சென்றாள்.

➸➸➸

படுக்கையில் படுத்திருந்த சந்திரனைப் பார்த்த அந்திமல்லி,

“என்னாயிற்று உனக்கு?” என்று கேட்டுக்கொண்டே தொட்டவளின் கை சுட்டது.

“அக்கா, பத்து நாட்களாக சுரம் குறையவேயில்லை. எல்லா டெஸ்ட்களும் எடுத்தாயிற்று. மலேரியா, டைபாயிடு, வைரல் பீவர், புதிதாக வந்த சிக்கன்குனியா என்று எதுவுமில்லை என்கிறார். நீங்கள் மல்லிகைமூலமாக கொடுத்தனுப்பிய மலர் பிரசாதத்தை தினமும் அவர் உடம்பின்மீது வைத்தேன். டாக்டர்களும் ஒன்றும் சொல்லமாட்டேன் என்கிறார்கள். எனக்கு

இருக்கும் ஒரே ஆதரவு, துணை எல்லாம் சந்திரன்தான். நீங்கள்தான் ஏதாவது செய்யவேண்டும்" என்று கெஞ்ச ஆரம்பித்தாள் ரோஜாவிடம் அந்திமல்லி!

"அம்மா, உங்கள் மகள் சொல்வது கேட்கிறதா! என்னவென்று தெரியவில்லையென்றாலும் சந்திரனின் உடம்பை சரிசெய்யுங்கள்" என்று மனமுருகி ரோஜா பிரார்த்தனை செய்தாள்.

பூவரசம்பூ, பருத்தி ரோஜா பூக்களை எடுத்த ரோஜா,

"அந்திமல்லி, சந்திரனின் உடல்நிலை சரியாகவேண்டுமென நீயே ஆரோக்கியத்தையும், அருளையும் அன்னைக்குச் சார்த்தி பிரார்த்தனை செய். பிரச்சினைக்குரியவர்களே பிரார்த்தனை செய்தால், அதுவும் நம்பிக்கையுடன் பிரார்த்தித்தால் நிச்சயம் அன்னையின் அருள் கிடைக்கும். பூக்களை சந்திரனின் கையில் வைத்தும் பிரார்த்தனை செய், சரியாகி விடும். ஒன்றும் இருக்காது" என தைரியம் கொடுத்தாள்.

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

இறைவனை நோக்கிச் செல்லும் பாதையில் உன் அனைத்துச் சக்தியும் செலவாகிவிட்ட நிலையே முதற்படி.

***முழுசக்தியும் செலவான முதற்படி.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மன உயர்வைத் தரும் வாய்ப்புகள் உயர்ந்தவையானால், அவை தங்களுடன் உயர்ந்த சிரமங்களையும் தாங்கி வருவதால், அவற்றை விரும்பி நாடமுடியாது.

***தானே வரும் வாய்ப்புகளே மனஉயர்வைப் பெற்றுத் தரும்.***



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**901) மனம் திருட்டு ஆசையை நாடும் என்பது ஆங்கில வாக்கு. லீலை என்ற உயர்ந்த கருத்தை இது தாழ்ந்த நிலையில் வெளிப்படுத்துகிறது. தானே மறைந்து, மறந்ததை மீண்டும் காண்பதே சிருஷ்டியில் பெரிய ஆனந்தம் என்பதே அடிப்படை உண்மை.**

***திருட்டு ஆசையை நாடும் மனம் பிரம்மத்தை திருட்டில் வெளிப்படுத்துகிறது.***

தலைவருக்குத் தொண்டர்களை அதிகாரம் செய்வதில் ஆசை.

தொண்டர் தலைவருக்குப் பணிவதில் ஆசை.

**ஒரே ஆசை இரு வகையாகத் தென்படுகிறது. இதுவே இரட்டை எனப்படும்**.

திருட்டுப் பழக்கம் உள்ளவர்களில் ஒரு சிலருக்குப் பொருள் தேவைப்படாது. என்றாலும் திருட ஆசையாக இருக்கும். இதற்கு Kleptomania கிளப்டோமேனியாஎனப் பெயர். ஜார்ஜ் V அரசனுக்கு இப்பழக்கம் உண்டு.

பொய் சொல்வது பரவலான பழக்கம்.

தப்பிக்கப் பொய் சொல்வது ஒன்று.

பெருமைக்குப் பொய் சொல்வது,

ஆதாயத்திற்குச் சொல்வதுஎன பொய் சொல்லும் வகைகள் பல.

**பொய் சொல்ல ஆசைப்படுபவரும் உண்டு.**

**எதையும் பொய்யாகச் சொன்னால்தான் திருப்திஎன்பது ஒரு வகை.**

**அவர்கள் மெய்யைச் சொல்லும்பொழுது பொய்யாகத் திரித்துச் சொல்வர்.**

எலக்ஷனில் காசு கொடுக்காமல் ஜெயித்தவர் அந்த மெய்யை காசு கொடுத்து ஜெயித்தேன் என்ற பொய்யாக மாற்றிச் சொல்வதுபோல் பேசுபவருண்டு.

தன் வாயால் மெய் வரும் 'பாவத்தை' செய்யக்கூடாதுஎன்ற முடிவு உடையவர் அவர்.

எந்தச் சாதனையும் பர்சனாலிட்டி அளவுக்கே பலிக்கும்என்பது சட்டம்.

மனிதனுடைய பொதுவான பர்சனாலிட்டி பொய் சொல்வது.

அதனால் மனம் பொய்யை நாடுகிறது. பொய் செயல்படுவது திருட்டு.

சமூகத்தில் சத்தியசந்தன்எனப்பட்டவருண்டு. அது குறைவு.

பொய்யையே கருவியாக்கி வாழ்பவருண்டு. அதுவும் மிகக்குறைவு.

இடைப்பட்டவர் பல்வேறு அளவில் பொய் சொல்வார்கள்.

பொய் செயல்படும்பொழுது திருட்டானாலும், பொய் சொல்லும் அளவுக்குத் திருடுபவரில்லை.

பொய்யை மனம் ஏற்றாலும் அதைச் செயல்படுத்தும் திருட்டை அந்த அளவுக்கு மனிதனால் ஏற்கமுடியவில்லை.

திருட்டு ஆசையை நாடுவதும் பிரம்மத்தின் செயல்.

சிருஷ்டியில் பேரானந்தம் அனுபவிக்க பிரம்மம் ஒளிந்து கண்டுபிடிக்-கிறது.

மனிதன் திருட்டு ஆசையை நாடுவதும் பிரம்மம் தன்னைக் கண்டு-பிடிக்க ஒளிவதும் ஒரேவிதமான செயல்களாகும்.

காதல் திருமணங்களில் ஒரு சிலவற்றில் இந்த அம்சம் உண்டு.

திருட்டுத்தனமாகச் செய்வதே செய்வதாகும்என நினைப்பவரில் சிலர் இதை நாடுவர்.

எல்லா உறவுகளிலும், எல்லாச் செயல்களிலும் இந்த அம்சம் ஏதாவது ஒரு வகையில் ஏதோ ஓரளவு செயல்படும்.

❀❀❀

**902) தீமை மாறுதலுக்கு அவசியம். தீமை என்ன என்பதை அறிந்தால் தீமை மறையும். தெளிவு குறையும்வரை தீமையால் கஷ்டப்படவேண்டும்.**

***தீமையின்றி மாறுதலில்லை. தெளிவால் தீமை அழியும்.***



அனுபவம் என்பதை பட்டறிவு என்கிறோம். பாடுபட்டுப் பெறும் அறிவுக்கு அப்பெயர். பாடுபடாமல் உட்கார்ந்திருப்பவனுக்கு அனுபவமில்லை. கொடுமைக்கு ஆளானவர் பலர் வாழ்வில் முன்னேறினர். அக்கொடுமையில்லாமல் அம்முன்னேற்றமில்லை. கஷ்டப்பட்டு வேலை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் கொடுமை செய்வதையே செய்யும். டைப்பிஸ்டுக்கு விரல் வலிக்கும், நரம்பு சுண்டி இழுக்கும். பாத்திரம் தேய்ப்பவருக்கு கை முரடாகும். மண்ணெண்ணெயில் வேலை செய்பவருக்கு மற்ற வாசனை தெரியாது. இவை நாற்றம், அழுக்கு, சிரமம் ஆகும். இவை இருண்டால் தீமையுண்டாகும். அது கடுமையானது, கொடுமை வழி வரும். பட்டினி கிடப்பது சிரமம்; வயிறு வலிக்கும். சாப்பாடு இருந்து, ஒருவர் கொடுக்க மனமின்றி பட்டினி போடுவது மனமும் வலிபடும் கொடுமை. அந்தச் சாப்பாட்டை ஊசலடிக்கவைத்து, அழுகியபின் கொடுத்து சாப்பிடச் சொல்வது சிறுமை, கடுமை, கொடுமை கலந்த கயமை. பாத்திரம் தேய்த்தால் கை முரடாகும்; அது தன் மிருதுத் தன்மையை இழக்கும். பட்டினி கிடந்தால் நரம்பில் வேகம் எழும்; குணம் கெட்டு எரிச்சல் எழும். பிறர் வேண்டும் என்றே பட்டினி போட்டால் மனம் கசந்துவிடும். இதைக் கடந்து வேதனை, வதை, சித்ரவதை ஆகியவை மனத்தையும் ஊடுருவி ஆத்மாவை எட்டி அதைக் கசப்பாக்கும். உடலோ, உணர்வோ, மனமோ கசங்கலாம்; ஆத்மா வெளிவந்தால் அதற்குக் கசப்புத் தெரியாது. ஆழ்ந்து புதைந்துள்ள ஆத்மா வெளிவர கொடுமை உலகில் உலவுகிறது. வெளிவந்த ஆத்மா மனத்தையும், உயிரையும், உடலையும் கசப்பில் இருந்து விடுவித்து ஒளிமயமாக்குவது மாறுதல். அதனால்,

**தீமையின்றி மாறுதலில்லை.**

**மாற்றம் மனிதனுக்கு ஏற்றம்.**

**நாம் தேடுவது திருவுருமாற்றம்.**

**மாற்றம் உருவை மாற்றுவது உரு மாற்றம்.**

**அது தெய்வீக உருவானால் அம்மாற்றம்,**

**திருவுருமாற்றம் எனப்படும்.**

**அதைச் செய்வது சரணாகதி.**

**சரணாகதி சமர்ப்பணத்தில் ஆரம்பிக்கிறது.**

**சமர்ப்பணம் எழ அன்னை நினைவு வேண்டும்.**

**அது மேலெழ 'நாம்' என்ற நினைவு நீங்கவேண்டும்.**

**அது அடக்கம்.**

**அகந்தை அழிவது அடக்கம் எனப்படும்.**

**தீமை இவற்றிற்கெல்லாம் அவசியம்.**

*தொடரும்.....*

❀❀❀

## ஜீவிய மணி

**பெறுவது சிறியது; கொடுப்பது பெரியது.**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உலகம் ஜடத்தால் ஆளப்படுகிறது. ஜடம் மனத்தை நிர்ணயிக்கிறது. சிருஷ்டியும், பரிணாமமும் மனத்தால் நடப்பவை. அவற்றுள் மனம் ஜடத்தை நிர்ணயிக்கிறது. எனவே ஜடத்தை மாற்றி அங்கு மனத்தை பிரதிஷ்டை செய்தால் அளவுகடந்த முன்னேற்றமான மாற்றம் ஏற்படும்என்பது மட்டுமில்லை, அடுத்த பரிணாமக் கட்டத்தில் அளவால் நிர்ணயிக்க முடியாத வளர்ச்சிக்குரிய முன்னேற்றமும் எழும்.

***மனமும், ஜடமும் இடம் மாறினால்***
***உலக முன்னேற்றம் பெரியதாகும்.***



"Agenda"

**மனிதன் தன் அகங்காரம் பூரணமடைய வாழவில்லை.**
**இறைவன் திருவுள்ளம் பூர்த்தியடைய வாழ்கிறான்.**

டெல்லியில் அன்னை பேரால் நடக்கும் பள்ளியில் ஒருவரை வேலை நீக்கம் செய்ததால், ஆசிரியர் வேலை நிறுத்தம் செய்தனர். பள்ளி மூடப்பட்டது. வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஆசிரியர் அன்னையைச் சந்தித்தார். “நீயே போய் நிலைமையை சரி செய்” என்று அன்னை மீண்டும் டெல்லிக்கு அனுப்பினார்.

✡ **விஷமம் செய்தவரையே அதைத் திருத்தச் சொல்வது அன்னை முறை. அது திருவுருமாற்றத்திற்குரியது.**

✡ **மனிதன் நல்லவன், கெட்டவன் என்று பிரிக்கப்படுவான்.**

**எவரும் நல்லவராக இருக்கப் பிரியப்படுவார்.**

**யோகம் செய்ய கெட்ட மனிதனால் முடியாது என்பதுபோல நல்ல மனிதனாலும் முடியாது. நல்லது ஒரு குணம். குணம் யோகத்திற்குத் தடை.**

**நல்ல மனிதன், கெட்ட மனிதன் என்ற நிலைமைகளைக் கடந்து *மனிதன்* உண்டு.**

**நல்ல மனிதன் முயன்று செய்வதை, மனிதன் இயல்பாகச் செய்வான்.**

**மனிதன்என்ற நிலையை எய்தியபின், தெய்வம்என்ற நிலையை எட்ட முடியும்.**

**அகங்காரம் உள்ளவரை நல்லவன், கெட்டவன் உண்டு.**

**அகங்காரம் விலகினால் கெட்டது விலகுவதுபோல், நல்லதும் விலகும்.**

**அகங்காரம் அற்ற மனிதன் *மனிதன்.***

✡ **பிரச்சினையை உற்பத்தி செய்பவன் தவறான மனிதன்.**

**தானே அப்பிரச்சினையைத் தீர்க்க முற்பட்டால் தவறான மனிதன் மாறுகிறான். அதுவே அன்னை முறை.**

✡ **உத்தமி, குணவதி என்பவள் நல்ல குடும்பம் நடத்த உதவுவாள்.**

**அவள் கணவன் யோகம் செய்ய உதவமாட்டாள்.**

**கணவன் முன்னேறுவதைப் பாராட்டுபவள் நல்ல மனைவி.**

**எவ்வளவு முன்னேறினாலும் அவன் குறையைச் சுட்டிக்காட்டும் மனைவி அவனை யோகப்பாதைக்குத் திருப்புபவள்.**

**அன்னை மனைவி ரூபத்தில் வந்து, "நீ நல்ல மனிதனாவதற்குப்பதிலாக எரிச்சல்பட முடியாத, எடுத்துக்காட்டான மனிதனாகும்படி நான் உன்னைப் பணிக்கிறேன்" என்பவை அவனுக்கு யோகக்கருவி.**

**யோகத்தை மேற்கொண்ட கணவனுக்கு நல்ல மனைவியைவிட அவன் யோகத்தைப் பூர்த்திசெய்யும் மனைவியை அன்னை தருகிறார்.**

**எது அவள் குணக்குறை என உலகம் உணருகிறதோ, அதை ஊடுருவிப் பார்த்தால் அதன்பின் அன்னையின் கரமிருக்கும். அந்த திருஷ்டி பூர்த்தியானால் மனைவி அன்னையாகத் தரிசனம் தருவாள்.**

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தவிர்க்க முடியாத பிரச்சினையை ஒதுக்கி அன்னையை அழைப்பது, வாழ்வுக்கெதிராக அன்னையை ஏற்பதாகும். அது யோகத்தை ஏற்கும் திருப்புமுனையாகும்.

***யோகத்தை ஏற்கும் அழைப்பு.***



# யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**56.** ***பரம எதிரியின் வாயால் நல்ல பெயர் வாங்க வேண்டும்.***

அப்படி ஒரு காரியம் செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆனால் நமக்குப் பெரும்பலன் தரும்.

சுத்தம் வருமானத்தை உயர்த்துவதற்கு எத்தனையோ காரணங்களுண்டு.

அவற்றுள் ஒன்று, சுத்தத்திற்கு நாம் எடுக்கும் முயற்சியால் அதிக சக்தி உள்ளே வருகிறது; அது பணம்.

சாஸ்திரிக்கு சமஸ்கிருதம் தெரியும்; செட்டியாருக்குப் பணம் உண்டு; புரொபஸர் படித்தவர்; ரெட்டியாருக்கு செல்வாக்குண்டு; நடிகை அழகி; அரசியல்வாதிக்குக் கூட்டம் வருகிறது.

சாஸ்திரியைப்போல் 5, 6 மடங்கு சமஸ்கிருதம் படித்த பட்டேலை சாஸ்திரி ஏற்கமாட்டார். செட்டியாருக்கு 1 கோடியிருந்தால், நாயுடு 5 கோடி சம்பாதித்தாலும் செட்டியார் வாயால் நாயுடுவைப் பணக்காரன் என்று கூறமாட்டார். புரொபஸர் M.A. படித்தவர். பட்டம் பெறாமல் M.Phil., Ph.D., D.Litt. பாடங்களைப் படித்தவரை புரொபஸர் தம்வாயால் படித்தவர்என ஏற்கமாட்டார். ரெட்டியார் பஞ்சாயத்து பிரஸிடெண்ட். அவர் குத்தகைக்-காரன் M.L.A. ஆனாலும், M.P.யே ஆனாலும் அவனுக்கு பிரபலம் உண்டு என ஏற்கமாட்டார்.

சீனுவாச ராமானுஜம் எழுதியவற்றை இன்றுவரை உலகில் புரிந்து கொள்ள ஒருவரும் (Mathematician) இல்லை. அவர் கேம்பிரிட்ஜிலிருந்த பொழுது பெரிய மனது செய்து அவருக்கு B.A. பட்டம் கொடுத்தனர். பிறகு M.A.யும் கொடுத்தனர். (Establishment) ஏற்கனவே உலகில் செல்வாக்குடன் வாழ்பவன் அவனைவிட 100 மடங்கு பெரியவனையும் ஏற்கமாட்டான்என்பது அனுபவம். சர்ச்சில் நேருவை leader of a tiny

minority சிறுபான்மையோர் தலைவர் என்றார். இவையெல்லாம் உண்மையானாலும், எதிரானவையும் உண்மை.

❀ மாமியார் தாயார் போலும் இருக்கிறார்.

❀ Max Muller ஐரோப்பியர் என்றாலும் Max Muller பவன் கட்டி, அவர் பாண்டித்யத்தைப் பாராட்டுகின்றனர்.

❀ காமராஜை இராஜாஜி பிரபலமான முதல்வர் என்றும் கூறினார்.

வாழ்வில் ஆயிரத்திலொருவருக்கு நடப்பது அன்பர்கள் அனைவருக்கும் நடக்கும்.

நமக்கு எதிரி என்று ஒருவர் ஏற்பட்டுவிட்டால், அவர் வாயால் நல்ல பெயர் வாங்க முனைந்தால் அது அன்பனை அன்னைக்குகந்தவராக்கும்.

"உங்கள் நாணயத்தை உலகம் மெச்சும்",

"உயிரை விட்டு ஸ்தாபனத்திற்கு உழைத்தீர்கள்" எனப் பரம எதிரி அன்பர்களைச் சொல்லியதுண்டு.

## 57. துரோகத்தைப் போற்று.

சர்வம் பிரம்மம்எனில் துரோகமும் பிரம்மம்.

அனுபவத்தில் கடந்தகாலத் துரோகம் பெரிய காரியம் சாதித்ததை அறியலாம்.

பிறர் நமக்குச் செய்ததும், நாம் பிறருக்குச் செய்ததும் அப்பலன் கொடுத்-தன.

ATM முதலாளியின் அனுபவம் தெளிவானது.

ஆழ்ந்து புதைந்துள்ள ஆத்மாவைத் துரோகம் மட்டுமே வெளியில் கொண்டு வரும்.

கொலை, கொடுமை, சூன்யம், துரோகம் அழிப்பதையும் காணலாம்.

பலன் பெரியது என்பது மட்டும் உறுதி.

துரோகம் செய்பவர் ஏதோ ஒரு சமயம் உயர்வதும் உண்டு; இது விதிவிலக்கு.



விலக்கு விளக்குவதுபோல் சொல்நயம் விளக்காது.

செய்பவர் மனநிலைக்கேற்ப பலன் வரும்.

சண்டிக்குழந்தையை அடித்து வளர்ப்பது நல்லது.

எந்த மனப்பான்மையுடன் அடிக்கிறோம் என்பதின் பலனை அடிப்பவர் பெறுவார்.

குழந்தை முன்னுக்கு வரும் மனப்பான்மை நல்லது.

துரோகம் ஒருவர் முன்னேறப் பயன்படும்என அறியாமல் செய்பவருக்கு ஆழ்ந்த நல்ல எண்ணமோ, கெட்ட எண்ணமோ இருக்கலாம்.

**பகவான் அன்னைக்குத் தடைகளை ஏற்படுத்தியவண்ணமிருந்தார்.**

நல்லது என்ற அறிவில்லாமல் சுபாவத்தால் துரோகம் செய்து பலியானவர் உயர்ந்தால், துரோகம் செய்பவரும் உயர்வார்.

கெட்ட எண்ணம் கெட்ட பலனை அவருக்குத் தரும்.

T.E. Lawrence of Arabia அனுபவம் அடிப்படை உண்மை.

உண்மையில் ஆரம்பித்தால் உண்மை வளரும்.

எதில் ஆரம்பித்தாலும் அது வளரும்.

பொய்யில் ஆரம்பித்தால் பொய் வளரும்.

துரோகியை அன்னையாக அறிவது ஆத்மஞானம்.

துரோகி தம்மை உயர்ந்த கருவியாகவும் செய்யலாம்.

திருவுருமாற்றம் பெரியது; உலகம் அறியாதது. துரோகிக்குக் கிடைக்கும்.

எல்லோருக்கும் திருவுருமாற்றம் உண்டு.

துரோகியின் திருவுருமாற்றம் முடிவான பெரியது.

எந்த நேரம் உண்மையை உணர்ந்தாலும் பலன் உடனே வரும்.

மனம் துரோகத்தை நாடக்கூடாது.

எதிரியின் துரோகத்தைப் பாராட்டினால் துரோகம் வளரும்.

துரோகம் செய்வது மனிதரானாலும், வாழ்வானாலும் அதைச் சேவையாக

நினைப்பது திருவுருமாற்றத்திற்குரிய நினைவு.

எதுவும் நல்லதே.

துரோகம் பெரிய நல்லது.

**58. பேயான மனிதனுக்கு அடிமையாகச் சேவகம் செய்.**

சுயநலமிக்கும், பேயான மனிதனுக்கும் சட்டம் ஒன்றே.

ஒன்று ஐஸ், அடுத்தது ஐஸ்கிரீம்.

ஒன்று கூலிக்காரன்; அடுத்தது நரி பிடிக்கும் குறவன்.

நம்மை நாடி பேய் வருகிறதெனில் நம்முள் உள்ள பேய் அழைத்து வருவது அது.

பல முறை நம்மைப் பிறர் 'பேய்' என்று கூறியிருப்பார்கள்.

ஒரு முறையாவது அப்படிச் சொல் வாராமலிருக்காது.

பொதுவாக அது நமக்குத் தெரிந்ததாக இருக்கும்.

என்னைக் கிளப்பாதே. நான் பேயாய்விடுவேன்என நாம் கூறுவது நினைவு வரும்.

**வந்த பேய் உள்ளே உள்ள 'நான்' என்பதை ஏற்பது யோகஞானம்.**

அதை ஏற்க மனமில்லாதவர் அடுத்த வரி படிப்பது பலன் தாராது.

அதை ஏற்றபின் அவர் செய்வது எதுவும் நமக்கு எரிச்சல் தரக்கூடாது.

அரைக் கூட்டாளி 50 இலட்ச இலாபத்தில் 45 இலட்சம் கேட்பார். உனக்கு 5 இலட்சம் போதாதா என்பார். நியாயத்தை எதிர்பார்த்தால் இந்த disciplineக்கு வர முடியாது.

'அவர் கேட்பது நியாயம். நானும் அப்படித்தான்' என மனம் ஏற்க துறவியாலும் முடியாது. இந்த யோகத்தைத் துறவிகளால் செய்ய முடியாது. அவர்கள் சபிப்பவர்கள். எரிச்சலே வரக்கூடாதுஎன்றால் கோபத்திற்கு இடமில்லை.

எதிரியின் அநியாயம் ஏற்றமிகு நியாயம்என 100 வருஷத்திற்கு



முன்னிருந்த மருமகள், தொழிலாளிபோல் மனம் ஞானம்பெற்று, வணங்கி காத்திருந்தால் அவர் நிலை நம்நிலையாகும்; நம்நிலை அவர்நிலையாகும்.

அந்த நேரம் நம்முள் உள்ள பேயின் வீரியம் குறைந்திருக்கும்.

என்கூட்டாளி என்உயிரை எடுத்திருக்காவிட்டால், நான் பண்பாக மாறியிருக்கமாட்டேன்என முடிவில் தோன்றும்.

**அப்பொழுது இலாபத்தில் 90% நாம் பெறும் தொழில் ஏற்படும்.**

அநியாயம், ஆண்டவன் நியாயம்என மனம் ஏற்க வேண்டும்.

ஏற்பதே கடினம். செயல்படுத்துவது அதனினும் கடினம்.

நம் பொருளை அநியாயமாக எடுத்துப்போகும் நபரை நாம் பொறுத்துக் கொண்டிருந்தால் நம்மை அவர் திட்டிவிட்டுப் போவார்.

பொறுமை கடினம்.

கடினமான பொறுமை கனவிலும் கருதாத ஆன்மீகப்பலன் தரும்.

கணவனே பேயாவதுண்டு. மனைவிக்கு அந்த உரிமையுண்டு.

பெற்றோர் அதுபோல் நடக்க உரிமை கொண்டாடுவர்.

உரிமையை இழந்து, பொருளையும், மானத்தையும் **எரிச்சல்படாமல்** இழந்து, பொறுமையாக இருந்தால் பலன் உண்டு.

**59. நல்லவரையும், பொல்லாதவரையும் சமமாக மனத்தில் பாராட்டு.**

டாக்டர், வக்கீல், ஜோஸ்யன், கடை, பஸ் ஆகிய இடங்களில் நம்மை பேஷண்டு, கட்சிக்காரன், ஜாதகன், வாடிக்கைக்காரர், டிக்கட் என்பர். நல்லவரா, கெட்டவராஎன யோசிப்பதில்லை; பணம் கொடுக்க வேண்டும். சம்பந்தம் செய்ய வேண்டும்எனில் நல்லவரா, கெட்டவராஎன யோசிக்க வேண்டும். அந்த இடங்களிலும் அந்த வேலைக்குரியவற்றைமட்டும் கருதினால் பிரச்சினையிருந்தால் குறையும். கடன் வாங்குபவர் நல்லவரா, கெட்டவரா என்பதைவிட அதற்குரிய சொத்துள்ளவரா, மாதாமாதம் வட்டிகட்டும் தொழில் வருமானம் உள்ளவராஎனக் கருதினால் பிரச்சினை எழாது. ஆண்டவன் சிலரை ஒரு பாதையிலும், அடுத்தவரை அடுத்த

பாதையிலும் வரச்சொல்லியிருக்கிறான். இருவரும் அவனிடமே வருகிறார்கள். பார்லிமெண்ட்டிற்கு ஒருவர் M.P.ஆகவும், அடுத்தவர் மந்திரியாகவும், வேறொருவர் நிருபராகவும் வந்தால் அனைவரும் பார்லிமெண்ட்டிற்கு வருகிறவர்தாம். பாதை வேறு, இடம் ஒன்று, பலன் வேறு. நல்லவரை அனைவரும் அறிவர். பொல்லாதவரையும் அனைவரும் அறிவர். இருவரையும் உலகம் அறியும். எப்படி உலகம் நம்மையறிய நாம் பிரியப்படுகிறோமோ, அப்படி நாம் போகலாம். ஆனால் அது நம்கையில் இல்லை. அது நம் சுபாவத்தைப்பொருத்தது. நிலைமை மாறினால் தோற்றம் மாறும், பலன் மாறும். பஸ்ஸில் ஒருவரை கண்டக்டர் இடம்மாறி உட்காரச் சொன்னார். அவர் மறுத்தார். போலீஸ்காரன் அவரை மிரட்டினான். அவர் மிரளவில்லை. அவரை ஸ்டேஷனுக்கு அழைத்துப் போய் விலாசம் கேட்டார்கள். அவர் மாஜிஸ்ட்ரேட்எனத் தெரியவந்தது. போலீஸ்காரனுக்கு உடல் ஆடியது. எனக்குத் தெரியாது என்றான். பஸ்ஸில் அனைவரும் பயணிகள். ஒரு பயணியை மிரட்ட அதிகாரம் எவருக்கும் இல்லை. அப்பயணி மாஜிஸ்ட்ரேட்டானால் நிலைமை மாறுகிறது. ஏன் அனைவரையும் சமமாக நடத்தக்கூடாது? நாம் சமமாக நடத்துவதில்லை.

- ❀ ஆண்டவன் அனைவரையும் சமமாக நடத்துகிறான்.
- ❀ சமமாக நடத்தும் மனம் சரியாக இருக்கும்.
- ❀ என்றும், எவரையும் அவருக்குரிய மரியாதையுடன் நடத்தினால் பிரச்சினை எழாது; எழுந்தால் பாதிக்காது.
- ❀ தோற்றத்தைக் கருதினால் ஏமாற வழியுண்டு.
- ❀ தோற்றத்தின் பின்னுள்ள விஷயத்தைக் கருதினால் ஏமாற முடியாது.
- ❀ டிரஸ் தோற்றம் தரும்; அது சிறியது.
- ❀ பட்டம், வேலை, பணம், வயது தோற்றத்தை நிர்ணயிக்கின்றன.
- ❀ படிப்பு, மனிதத்தன்மை, திறமை, நாகரீகம் விஷயத்தைக் கருதுகின்றன.
- ❀ தோற்றத்தையோ, அந்த நேரத்தின் விசேஷத்தையோ கருதுபவர்க்கு ஏமாற்றம் வரலாம்.
- ❀ விஷயத்தையும், என்றும் நிலையானநாணயம், மனிதத்தன்மை



போன்றவற்றைக் கருதுபவர் ஏமாற வழியில்லை.

- ❀ ஆண்டவனுக்கு அனைவரும் ஆத்மா.
- ❀ அனைவரையும் ஆத்மாவாகக் கருதுபவர் ஆண்டவனாவார்.

## 60. நன்றியறிதல் உடலில் புல்லரிக்க வேண்டும்.

உடல் இறைவனை ஏற்பது நன்றியறிதல்.

புல்லரிப்பது முழுவதும் இனிமையாக ஏற்பது.

இதுவரை நடந்தவற்றிற்கு நன்றியறிதல் கூறுபவர்க்கு எதிர்காலம் பெரியது.

**நன்றி என்பது நம்முள் உள்ள இறைவன் அருள் வழி வரும் இறைவ-னைத் தொடுவது.**

நன்றி கூறுபவர் எதிர்காலப் பலனை எதிர்பார்த்த நன்றி போக, அந்தஸ்தால் பெற்ற நன்றியையும் விலக்கினால், உண்மையான நன்றியை ஒருவர் கண்டிருந்தால், மீண்டும் மீண்டும் கண்டிருந்தால்

**அவருக்கு நன்றியறிதல் உண்டு.**

இதுவரை செய்த எந்த யோகமும் உடலைத் தொடவில்லை.

உயிரிலும், மனத்திலும் உள்ளே போய் ஆழத்தைத் தொடவில்லை.

நெற்றிக்கண் நக்கீரருக்கு நன்றியை எழுப்பவில்லை; அகங்காரத்தை எழுப்பியது.

தெய்வங்கள் இறைவனை மறந்துவிட்டனர்.

நன்றி சமீபத்தில்தான் பிறந்தது.

அன்னை ஸ்ரீ அரவிந்தர் வீட்டைக் காட்டியவருக்கு நன்றி செலுத்தினார்.

இத்தாலிய சாணக்கியர் மாக்கிவல்லி “பிள்ளைகள் தகப்பனாருக்குப் பின் அவரை எளிதில் மறந்துவிடுவார்கள்” என்றார்.

50 ஆண்டிற்குமுன் சமையல்காரன் 10 இலட்சம் சம்பாதித்தான்.

பெரிய மகனிடம் பெட்டிசாவியைக் கொடுத்தான்.

அடுத்த நாள் பெரிய மருமகள் காலையில் அவருக்குப் பழைய சோறும், கணவனுக்குப் பலகாரமும் சேர்ந்துப் பறிமாறினாள்.

**காரியம் முடிந்தபிறகு கணம் தவறாமல் பணத்தைச் சிக்கனமாகச் செலவு செய்வது உலகம்.**

நன்றியறிதலுக்கு 40 சந்தர்ப்பம் எழுந்தாலும் ஒரு முறையும் நன்றி உள்ளிருந்து எழாது.

வாழ்க்கையில் நன்றி செலுத்த வேண்டிய அனைத்தையும் நினைத்துச் செலுத்தியபின், பாக்கியாக இருப்பது 40 பங்கிருக்கும்.

நன்றி உடலில் பிறந்ததில்லை.

மனம் நன்றியை அறியாது.

ஆத்மா நன்றிக்குரியது.

அது வெளிவருவதில்லை.

ஆத்மா வாழ்வுமூலம் நன்றியாக மலர்வது அன்னை வாழ்வு.

அன்னையை அறிந்ததற்கே நன்றி உரியது.

நன்றி நம்மை நல்லவராக்கும்.

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஜீவன் முழுவதும் ஆர்வமாகிப் பெற்ற ஞானமே, தன்னை அறிதல் என்பது. தன்னையறிந்தவன், தான் விருப்பப்படும் எதுவாகவும் ஆவான்.

***இன்று தன் நிலையை அறிந்தவன் எதையும் சாதிப்பான்.***

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Puducherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Puducherry-11 on behalf of The Mother's Service Society, Puducherry-11.
Editor: N. Asokan

# வாயு வேகம், மனோ வேகம், பூர்வஜென்ம ஞானம்

நான் டெல்லிக்குப் போகவேண்டும் என்றால் மனம் டெல்லியில் உள்ளது. அது மனோ வேகம். “நான் டெல்லிக்குப் போகவேண்டும்” என்ற சொற்கள் மனத்தில் உருவாவதைக் கண்டால், அதன்பின் எண்ண அலைகளைக் காணலாம். சொல்லை அழித்து, சொற்களற்ற எண்ணங்களைக் கண்டால் இந்த நான்கு வார்த்தைகள் உருவம் பெறுவதற்குள் 400 எண்ணங்கள் மனத்திரையில் தோன்றி மறைவதைக் காணலாம். அது சூட்சும மனம்; மனத்தைவிட வலிமை பொருந்தியது. எண்ண ஓட்டம் நின்றபின் மேலேழுவது அம்மனம். மனம் அங்கு நின்று படித்தால் இதுவரை 100 மணி நேரத்தில் படித்த புத்தகம் 10 மணி நேரத்தில் முடிவதைக் காணலாம். Concentration தியானம் நம்மை சொல்லிலிருந்து விலக்கி சொற்பதம் கடந்த மனத்திற்கு அழைத்துப் போகும். தியானம் அங்கு நிலைத்தால் புலன்கள் செயல்படா. கண்மூடி இருந்தாலும் மனம் நேரடியாகப் பார்க்கும். மனம் புலனுதவியின்றி செயல்படும்; நிஷ்டையில் அந்நிலை முனிவருடையது; விழிப்பில் அந்நிலை எட்டற்கரியது; பூரணயோகச் சாதகனுக்குரியது. அந்த நிலையில்,

***மனம் நினைப்பது உடனே நடக்கும்.***

“நான் நினைத்தேன்; நடந்தது” என்றபொழுது மனம் அந்நிலையில் இருந்திருப்பதை உணரமுடியும். சமர்ப்பணம் அந்நிலையில் போய் நிலைப்பது மனம் அழிய உதவும் பூரணயோகம். அந்நிலையை எட்டும்பொழுது, பிரச்சினைகள் பிரார்த்தனையின்றி கரையும். கேட்காமல் பெருவாய்ப்புகள் எழும். குறை எழுந்தால், எரிச்சல் உண்டானால், சந்தேகம் வந்தால், தயங்கினால், கவலை உருவானால், மனிதச் சுபாவம் மேலிட்டால் அந்நிலை மின்னலென அழியும். Mental impulses மனத்தின் வேகமான உந்துதல் எழும் இடம் அது. அளவுகடந்து அவசரப்பட்டவர் க்ஷணத்தில் பெரிய பொறுப்பை யோசனையின்றி ஏற்பார்கள். “எதையோ நினைத்து, எதையோ செய்து விட்டேன்” என ரோட்டில் போகும்பொழுது திருமணத்தை முடிப்பார்கள்; கேட்காமல், 20 லட்சம் வருமானமிழந்தவர் கடனை அடைக்கக் கொடுப்பார்கள்; முழுச்சொத்தையும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிடுவார்கள். இவர்களை அவசரப்பட்டவர் impulsive characters என்பார்கள். **அப்படி எழுந்த பிரச்சினை ஆயுள்வரை தீராது. அன்னைக்குப் பிரார்த்தனை செய்தால் தீர்வது போன்ற நிலை ஏற்படும்; தீராது. பிரார்த்தனை மறந்துபோகும்**. மீண்டும் அதே இடம் போய் - மனத்தில் - நின்று பிரார்த்தனை செய்தால் உடனே தீரும். அங்கேயே மனம் லயித்துவிட்டால் யோகம் பலிக்கும்.

*Contd. on the back cover........*

# வாயு வேகம், மனோ வேகம், பூர்வஜென்ம ஞானம்

*Contd. from front cover........*

பூர்வஜென்ம ஞானம் பிறர் தருவது பயன் தாராது. நாம் மேற்சொன்ன இடத்தில் நின்று நிஷ்டை பலித்தால் பூர்வஜென்ம அனுபவங்கள் தெரியும். ராமகிருஷ்ணர் விவேகானந்தரின் முற்பிறவியை அப்படி அறிந்தார். பூர்வஜென்ம ஞானம் யோகத்திற்குப் பயன்படும். வாழ்க்கைக்கு அது அவசியமில்லை. அன்னை சொல்லும் வேகம் ஒளியின் வேகத்தைக் கடந்தது. அது மனோ வேகத்தையும் கடந்தது. மனத்தில் சூட்சுமமிருப்பது போல் உடலுக்கும் சூட்சுமம் உண்டு. மனத்தின் சூட்சுமத்தைக் கடந்து, உயிரின் சூட்சுமத்தைக் கடந்து, உடலின் சூட்சுமத்தில் அன்னை யோகம் செய்தால், அங்கு அன்னை கூறும் வேகம் உண்டு. அது யோகசக்தியின் வேகம். நம்மையறியாமல் எண்ணமழிந்து, உணர்வு ஸ்தம்பித்து, உடல் கிளர்ந்தெழுந்து, அதன் சூட்சுமம் ஏதோ ஒரு சமயம் க்ஷணம் தென்படும். அந்த நேரம் மனத்தின் சூட்சுமத்தில் செயல்படும் அருள், உடலில் பேரருளாகிச் செயல்படும்.

✡ **வாழ்வில் யோகசக்தி செயல்பட வேண்டினால் அதற்குரியது இது.**

✡ **வாழ்வுஎன்றால் அது நம் சொந்த வாழ்வாகாது; பொது வாழ்வாகும்.**

✡ **இதனால் நமக்குப் பலன் வர, உலகம் பயனடைந்து, அதனால் நாமும் பயன் பெறுவோம்.**

✡ **நமக்கு, செல்போன் வேண்டும், போன்கால் மலிவாக வேண்டும் எனில் அது உலகில் அனைவருக்கும் வந்து, அதன்மூலம் நமக்கும் வர வேண்டும்.**

✡ **இந்த சக்தி செயல்பட நம் பிரார்த்தனை, "அனைவருக்கும் வந்தபின் எனக்கு வரட்டும்" என்றிருப்பது பொருத்தம்.**

✡ **கிராமத்திற்குப் பயிர் லோன் கேட்கப் போய், பாங்க் தேசீயமயமாகி, இந்திய விவசாயிகள் அனைவருக்கும் லோன் வந்து, நம் கிராமத்திற்கும் வந்தது ஓர் அனுபவம்.**

✡ **வரப் போகும் பிறவிகளில் செய்யவேண்டிய புண்ணியம் இப்பொழுது பலிக்க இந்த பூர்வஜென்ம ஞானம் பயன்படும்.**

❀❀❀